விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 14 வெள்ளிக்கிழமை (30.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 223

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நா. சபையும் இலங்கை அரசும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்

## யப்பான் அமைச்சர் அட்வைஸ்

(டோக்கியோ)

ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று யப்பான் கோரியுள்ளது. யப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சென்றிருக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், யப்பானிய வெளிவிவகார அமைச்சர் கட்சுயா ஏகடாவை நேற்று சந்தித்து உரையாடினார். அதன்போதே யப்பானிய வெளிவிவகார அமைச்சர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளைக்கொடி வழக்கு

## சரத் பொன்சேகா மன்றில் ஆஜர் 20 சாட்சிகளுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

யுத்தத்தின் இறுதி நாட்களில் வெள்ளைக் கொடிகளுடன் படையினரிடம் சரணடைய வந்த தமிழீழ விடுதலைப்புலிகளை படுகொலை செய்ய வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட்டிருந்தார் என்று சண்டே லீடர் பத்திரிகைக்கு பேட்டி அளித்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குக்காக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று ஆஜரானார்.

இவ் வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர தலைமையில் சக நீதிபதிகளான வி.வரவெவ, (20ஆம் பக்கம் பார்க்க)

## எந்தவொரு பயங்கர குற்றவாளியையும் அரச சாட்சியாக பயன்படுத்த முடியும்

## அமைச்சர் கெஹலிய விளக்கம்

(கொழும்பு)

எந்தவொரு பயங்கரமான குற்றவாளியையும் அரசாங்கத்தின் சாட்சியாளராக அவரின் உதவியைப் பெற்றுக்கொள்ள நாட்டின் சட்டத்தில் இடம் இருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்துக்காக மன்னிப்பு வழங்கி நாட்டின் அடிப்படை சட்டத்தை (20ஆம் பக்கம் பார்க்க)



## சம்பந்தனின் வேண்டுகோளை ஏற்றே இந்திய சிறப்புத்தூதுவர் அனுப்பிவைப்பு

## இலங்கை அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் வேண்டுகோளை ஏற்ற இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் தனது சிறப்புத் தூதுவரை அனுப்புகிறார்.

இலங்கை நிலைவரம் குறித்து ஆய்வு செய்வதற்காக இந்திய அரசின் சிறப்பு பிரதிநிதியொருவர் இலங்கை வரவிருப்பதில் எவ்வித ஒளிவுமறைவுமில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

அமைச்சரவை (20ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு முகாமில் உள்ள புலிகளுக்கு சர்வதேச வலையமைப்புடன் தொடர்பு?

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மன்னார் மருதமடு புனர்வாழ்வு முகாமில் உள்ள புலிச் சந்தேகநபர்கள் தமது சர்வதேச வலையமைப்பினருக்கு தகவல் வழங்கியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபாய மெதவல தெரிவித்தார்.

மன்னார் மருதமடு புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தம்மிடம் இரகசியமான முறையில் மறைத்து வைத்திருந்த 17 கையடக்க தொலைபேசிகள் உட்பட பல உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதுகுறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

சில கையடக்கத் தொலைபேசிகளை அவர்கள் தமக்கு தேவையான நேரத்தில் பயன்படுத்திய பின்னர் புதைத்துவைத்திருந்தாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது இந்த சம்பவத்துடன் தொடர்புடைய புலிகளின் சந்தேகநபர்கள் வெளி (20ஆம் பக்கம் பார்க்க)

## சீன இராணுவமும் இலங்கைக்கு வரும்

(கொழும்பு)

கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள சீன இராணுவத்தினரை இலங்கைக்கு அனுப்ப சீன அரசாங்கம் முயற்சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை துரிதப்படுத்துவதற்காக சீனாவிலிருந்து குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளதாக கூறப்படுகிறது. இதில் சீன இராணுவ அதிகாரிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுமார் 1500 சதுர கிலோ மீற்றர் நிலப் (20ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் உண்ணாவிரதமிருந்த பரமேஸ்வரன் வழக்கில் வெற்றி

### 77 ஆயிரத்து 500 ஸ்ரேலிங் பவுண்ட் நஷ்டஈடு வழங்கவும் இணக்கம்

(லண்டன்)

லண்டனில் உண்ணாவிரதம் இருந்த இலங்கைத் தமிழ் இளைஞர் பரமேஸ்வரன் சுப்பிரமணியம் உண்ணாவிரத நாட்களில் பர்கர் சாப்பிட்டதாக செய்தி வெளியிட்ட பத்திரிகைகளுக்கு எதிரான வழக்கில் வெற்றிபெற்றுள்ளார். இலங்கையில் போரை நிறுத்தக் கோரி 2009ஆம் ஆண்டு லண்டனில் வாழும் இலங்கைத் தமிழர் பிரிட்டிஷ் நாடாளுமன்ற வளாகத்தின் முன் நடத்திய போராட்டத்தின் ஒரு பகுதியாக பரமேஸ்வரன் 23 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்.

ஆனால் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின்போது அவர் இரகசியமாக பர்கரை சாப்பிட்டதாக லண்டனில் வெளியாகும் டெய்லி மெயில் மற்றும் சன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதற்கு எதிராக (20ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி மல்வத்தை பீடாதிபதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

கண்டி மல்வத்தை பீடாதிபதி திப்பட்டுவாவே சிறி சுமங்கல தேரர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

வடமராட்சி மற்றும் தென்மராட்சி பாடசாலைகளின் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே அவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

அதன் பின்னர் யாழ். நாக விகாரைக்கு சென்று விசேட வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் நல்லூர் ஆலய சூழலுக்குச் சென்று பார்வையிட்டார். இதன்போது அங்கு விற்பனை செய்யப்பட்டு வந்த பனங்கட்டிகளை தேரர் பெருமளவில் கொள்வனவு செய்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை நேற்றுமுன்தினம் கிளிநொச்சிப்பகுதிக்குச் சென்ற தேரர் அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ச – 5,7)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

22.07.2010 முதல்

ஸ்ரீகாந், பிருத்விராஜ், கமாலினிமுகர்ஜி மற்றும் பலர் நடிப்பில்



குற்றப்பிரிவு

செல்லா சினிமா(நாதன்ஸ்)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00

(C-588)



## வேலை ஆட்கள் தேவை

கட்டடப் பொருட்கள் விற்பனையில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தேவை.

தொடர்புக்கு :-
தேனுஜன் களஞ்சியம்,
பிரதான வீதி,
அச்சுவேலி. (C-769)



## வாடகைக்கு அறை தேவை

யாழ்.நகரப் பகுதியில் சிங்களம் கற்பிப்பதற்கு அறை ஒன்று தேவை. (பத்துப் பேர் அமர்ந்து கற்கக்கூடிய வசதி இருத்தல் விரும்பத் தக்கது)

தொடர்புக்கு :
0772283940

(2035)



## தொடர்பு கொள்ளவும்

29.07.2010 அன்று சண்டிலிப்பாய்க்கும் கட்டுடைக்கும் இடையில் சிறிய தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

தீபன் ஸ்ரோர்.
போயிட்டி,
இளவாலை. (C-775)


## நாடு திரும்புவோரிடம் பணம் பறிக்கும் கும்பல்!

வெளிநாடுகளில் பணியாற்றி விட்டு நாடு திரும்பும் இலங்கையர்களை ஏமாற்றி பாரியளவு பணம் பறிக்கும் மோசடி நடவடிக்கையில் ஈடுபடும் கும்பல் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பாரியளவு காப்புறுதித் தொகை ஒன்றை வழங்குவதாகத் தெரிவித்து வீடுகளுக்கே சென்று குறித்த கும்பல் பணத்தைக் கொள்ளையிடுவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது. (ச-5)

# மரண அறிவித்தல்



## செல்லையா கதிர்காமு
### (முறுகண்டி மணியம்)

மீசாலை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லையா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானை தம்பதிகளின் மருமகனுமாகிய **செல்லையா கதிர்காமு** (முறுகண்டி மணியம்) நேற்று (29.07.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பூரணத்தின் அன்பு கணவரும் சரவணமுத்து (அமரர்), சின்னத்தங்கம் (அமரர்), ஆகியோரின் சகோதரனும் உதயகுமாரன், ஜெயக்குமாரன்(பிரான்ஸ்), விமலகுமாரன்( நோர்வே), அற்புதமலர், அற்புதராணி(கனடா), அற்புதலீலா, அற்புதலதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரஞ்சிதமலர், ஜெயராணி(பிரான்ஸ்), வனிதா (நோர்வே), அருணாசலம்(இ.போ.ச. சாலைப் பரிசோதகர்) சிறிகாந்தன்(கனடா), நவரத்தினம், கலைச்செல்வன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் அபிரா, அதிதரன்(பிரான்ஸ்), அபர்ணா(பிரான்ஸ்), ஆருதன் (நோர்வே), அம்புஜன்(நோர்வே), ஆரவி(நோர்வே), ஆகியோரின் அப்பப்பாவும் வனிதா,முஜிந்தா, சாரங்கன்(கனடா), சாந்தனா(கனடா), சாலவன்(கனடா), கோபிநாத்(கனடா), மாதங்கி,விசாகன், அங்கஷன் (சுவிஸ்), வித்தகன்(சுவிஸ்) ஆகியோரின் அம்மப்பாவும், சிவகுமாரின் பேரனும் அறிவகன்,அம்சனாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 30.07.2010 வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு
கொடிகாமம்.**

**தகவல் :
குடும்பத்தினர்**

(2046)


யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

**Diploma in Mobile Phone Repairing**
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)

(யாது இக் கற்கை நெறியை கற்பதன் மூலம் 100% நீங்கள் Mobile Phone இனை திருத்தி கொடுக்க முடியும்)

*Fees - Rs.6000/= Only*

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

வகுப்பு ஆரம்பம் - 31/07/2010 நேரம் 12மணி

உங்கள் பதிவுகளை உடன் மேற்க்கொள்ளவும் !!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862
(C-767)



பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம்

A/L - 2010 வழிகாட்டல் கருத்தரங்கு
அரசியல் மூலதத்துவங்கள்

ஆசிரியர் - திரு.கோகுலன்

ஆரம்பம் - நேரம்
2.8.2010 திங்கள் 9-12 மணிவரை
வினாத்தாள் - I
3.8.2010 செவ்வாய் 9-12மணிவரை
வினாத்தாள் - II
(கையேடுகள் வழங்கப்படும்)
கட்டணம் 120/=
உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும் (C-770)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



27.07.2010 அன்று கொழும்பு மவுண்ல வெனியா ஹோட்டலில் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் "சூழலியல் செய்தியாளர்"

சிறப்பு விருது பெற்ற எமது சங்கத்தின் கொழும்புக் கிளை உறுப்பினரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான **திரு. குழந்தைவேல் ஜெயச்சந்திரன்** அவர்களை பாராட்டுவதுடன் மேலும் பல விருதுகளைப் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

இந்து வாலிபர் சங்கம்
வட்டுக்கோட்டை

(C-774)

## துயர் பகிர்கின்றோம்

வட புலோலி ஞான சம்பந்தர் கலைமன்றத்தில் பயின்ற மாணவசிறார்களிற்கான கற்பித்தல், கலை பயிற்றல் பணிகளில் மிக நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி பல சாதனையாளர்களை உருவாக்கிய

**திருமதி சூரியகுமாரி குலேந்திரம்**

அவர்களின் மறைவு எமது பிரதேச மக்களிற்குப் பேரிழப்பாகும். அவரின் மறைவினால் ஆற்றொணாத் துயரடைந்திருக்கும் அனைத்து உள்ளங்களோடும் நாம் துயரைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம். அவர்களுக்கு ஆறுதல் அளிக்கவேண்டியும் அன்னாரின் ஆத்மா சாந்தி பெறவும் எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை இறைஞ்சுகிறோம்.

(C-772) **மேல் தும்பளை வாழ் மக்கள்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி இரஞ்சினி சாம்பசிவம்
(B.A (Hons) Economics. Dip.in. Edu. [Distinction] SLTS - 3-1)
ஆசிரியர் உரும்பிராய் இந்துக் கல்லூரி

யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கை நெறியில் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்று பேராசிரியர் பி.சந்திரசேகரம் ஞாபகார்த்த தங்கப்பதக்கத்தைப் பெற்றமைக்காத் தங்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் பல உயர் பட்டங்கள் பதவிகள் பெற்று வளமாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்த்துவோர் :-**
சி.ஸ்ரீதரன், வ.சண்முகசுந்தரமூர்த்தி,
ம.மோகனராசன், ஜெ.முருகதாஸ், தி.விமலநாதன்,
ந.ஜெயதேவி, து.சுகுமார்.

(C-771)

## காரைநகர் வியாவில்
## பூரணா புஷ்கலா சமேத ஐயனார் ஆலய மகோற்சவம்

31.07.2010 கொடியேற்றம் - சனிக்கிழமை காலை 11.00 மணி - கொடியேற்றம்
07.08.2010 சப்பறத்திருவிழா - சனிக்கிழமை பகல் 12.00 மணி - புதிதாக அமைக்கப்பட்ட தேர்த் தரிப்பிடத்திற்கு தேர் எழுந்தருளல்
மாலை 5.00 மணி - வேட்டைத் திருவிழா
மாலை 8.00 மணி - சப்பற உற்சவம்
08.08.2010 தேர்த் திருவிழா - ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணி - வசந்த மண்டபப் பூசை
காலை 10.00 மணி - இரதோற்சவம்
பகல் 12.00 மணி - பச்சை சாத்துதல்
09.08.2010 தீர்த்தத் திருவிழா - திங்கட்கிழமை காலை 8.00 மணி - வசந்த மண்டபப் பூசை
(ஆடி அமாவாசை விரதம்) தீர்த்தக் கரைக்கு சுவாமி எழுந்தருளல்
மாலை 8.00 மணி - வசந்த மண்டபப் பூசை, கொடியிறக்கம்
10.08.2010 திருக்கல்யாண உற்சவம் - செவ்வாய்க் கிழமை மாலை 7.00 மணி - திருவூஞ்சல் திருக்கல்யாண உற்சவம்
11.08.2010 வைரவர் பொங்கல் - புதன் கிழமை மாலை 5.00 மணி - வைரவர் பொங்கல்

விளம்பர அனுசரணை கஜமுகன் ஹாட்வெயரிஸ்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். - அறங்காவலர்

# இன்று ஒரு தகவல்

## எக்ஸ்—ரே

ஆய்வு கூடத்தில் ஒருத்தர் 20 மணித்தியாலங்களாக உட்கார்ந்திருந்தார். அங்கே உட்கார்ந்து ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருடைய மனைவி சாப்பிடுவதற்காக கூப்பிட்டார். அதுகூட அவரது காதில் விழவில்லை.

என்ன ஆயிற்று இவருக்கு?

அந்த அம்மாவிற்கு மிகவும் கவலையாகிவிட்டது. 1895 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி அன்று மாலையில் அந்த ஆய்வுகூடத்தில் அவர் மட்டும் தான் இருந்தார்.

உதவியாளர்கள் எல்லாம் வீட்டுக்குப் போய்விட்டார்கள். ஒரு வெற்றுக் கண்ணாடிக் குழாயில் மின்சாரத்தைச் செலுத்தி இவர் என்னமோ செய்து கொண்டிருந்தார். அந்தக் கண்ணாடிக் குழாயில் கறுப்புத் தாளைச் சுற்றியிருந்தார். வெளிச்சம் வெளியில் வராமலிருக்க அறையிலிருந்த விளக்குகளையும் அணைத்துவிட்டார். இப்பொழுது அந்த வெற்றிடக் குழாய்க்குள் மின்சாரத்தை செலுத்தினார்.

வெளிச்சத் தடுப்புக்காகச் சுற்றியிருந்த கறுப்புத்தாள் தானாக ஒளிரஆரம்பித்தது. பேரியம் பிளாட்டினோ சயனேட் என்ற இரசாயனம் தோய்க்கப்பட்ட தாள் அது. ஒளிக்கற்றையின் புலனாகாத கதிர்களை காட்டக் கூடியது அந்த இரசாயனம்.

கறுப்பு நிறத்தாள் மூடப்பட்ட குழாயிலிருந்து புலனாகாத மர்மக்கதிர்கள் வெளியே வருவதைக் கண்டுபிடித்தார். உலகத்துக்கு மகத்தான கண்டு பிடிப்புக் கிடைத்தது.

அதுதான் எக்ஸ்ரே.

கண்டு பிடித்த விஞ்ஞானியின் பெயர்: வில்ஹெம் கான்ராட் ராண்ட்ஜன். ஜேர்மனியை சேர்ந்தவர். அந்த கதிர்களின் தன்மைகளை ஆராய்ச்சி செய்தார். பிளாட்டினம் , ஈயம் தவிர மற்ற எல்லாப் பொருட்களையும் இந்தக் கதிர் ஊடுருவிச் செல்லக் கூடியது என்பது புரிந்தது.

இந்தக் கதிரை தனது கையில் ஊடுருவச் செய்து அதை ஒரு புகைப்பட தகட்டில் பதிவு செய்தார். கை எலும்புகள் துல்லியமாக தெரிந்தது.

மனைவியின் கைகளை எக்ஸ்ரே கதிர்கள் மூலமாக படம் எடுத்தார். கை எலும்புகளுடன் திருமண மோதிரமும் அதில் தெரிந்தது.

மருத்துவ உலகில் தொழிற்துறையிலும் இந்தக் கண்டு பிடிப்பு ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

ஆரம்பத்தில் அவரை எல்லோரும் கொஞ்சம் அலட்சியமாகத் தான் பார்த்தார்கள். எக்ஸ்ரே கண்டுபிடிப்புக்கு பின்னர் தான் அவர் எப்படிப்பட்டவர் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டார்கள்.

ஜேர்மனிய பேரரசான கெய்சர் முன்னிலையில் ராண்ட்ஜன் எக்ஸ்ரயை இயக்கிக் காட்டினார். அந்த மன்னருக்கு இடது தோளில் ஒரு கோளாறு இருந்தது. அதைப்படம் எடுத்துக்காட்டினார். கோளாறு என்னவென்று புரிந்தது.

எக்ஸ்ரே கண்டுபிடித்த போது மக்களுக்கு ஒரு பக்கம் வியப்பு. இன்னொரு பக்கம் பயம். ஆடைகளை ஊடுருவிப் பார்க்கக்கூடிய கண்டு பிடிப்பு இது. என்று செய்திகள் பரவ ஆரம்பித்தது. அதனால் எல்லோரும் வெளியில் நடமாடவே பயந்தார்கள்.

அது எந்த அளவுக் ஆனது தெரியுமா? சில துணிவியாபாரக் கம்பனிகள் விளம்பரம் கொடுத்தார்களாம். எப்படித்தெரியுமா?

"எங்கள் கம்பனி உள்ளாடைகள் பாதுகாப்பானவை. எக்ஸ்ரே கதிர்களால் துளைக்க முடியாதபடி இவை உருவாக்கப்பட்டுள்ளன. என்று.

வதந்திகள் மக்களை பெரிதும் குழப்பி விட்டது. அந்தக் காலத்தில் எல்லாம் இசை நாட்டிய நிகழ்ச்சிகள் அதிகம். இன்றைக்கு சினிமா மாதிரி.

இந்த ஆபரா நிகழ்ச்சிகளுக்காக பெரிய அரங்குகளெல்லம் உண்டு. கடைசி வரிசையில் இருப்பவர்கள் தொலை நோக்கிக் கண்ணாடி வைத்துக் கொண்டு பார்ப்பார்களாம். 'ஆபரா கிளாஸ்' என்றே அதற்குப் பெயர்.

எக்ஸ்ரே ஏற்படுத்திய வதந்தியால் நிகழ்ச்சி நடத்தும் கலைஞர்கள் கலவரப்பட்டு போய்விட்டார்களாம். அமெரிக்காவில் ஒரு மாகாணத்தில் விசித்திரமாக ஒரு சட்டம் போட்டார்களாம்.

இனி, ஆபரா அரங்குகளில் எக்ஸ்ரே கதிர் உள்ள தொலை நோக்கு கண்ணாடிகளைப் பயன்படுத்த தடை விதிக்கப்படுகிறது. அது தான் சட்டம்.

இப்படிப்பட்ட கண்ணாடி செய்ய சாத்தியமா என்பது தெரியாமலேயே சட்டம் இயற்றினார்கள் என்றால் அது மிகவும் ஆச்சரியமகத்தான் இருக்கிறது.

அது இருக்கட்டும். இப்பொழுது எக்ஸ்ரே எதற்கெல்லாம் உபயோகப்படுகிறது தெரியுமா?

ஒரு இளைஞன் டாக்டரிடம் போனான். "டாக்டர், நான் உங்களோடு படித்த வெங்கட் ராமனுடைய மகன். அப்பா தான் உங்களிடம் அனுப்பினார். எனக்கு நெஞ்சுவலி" என்றான்.

"ரொம்ப சந்தோசம்" உங்கப்பன் எனக்கு பால்ய சிநேகிதம். எப்படியிருக்கிறான்? சரி நீ போய் ஒரு எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு நாளைக்கு வா" என்று சொல்லிவிட்டார். இவன் போய் எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு மறுநாள் போனான். டாக்டர் பார்த்தார். அவருக்கு ஞாபகம் வரவில்லை. பேசாமல் இருந்தார்.

"டாக்டர் நான், நேற்று வந்தேன் நீங்க தானே எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு வரச் சொன்னீர்கள்" என்றான்.

"அப்படியா சொன்னேன்? சரி படத்தை கொடு பார்க்கலாம்" என்று வாங்கினார்.

எக்ஸ்ரே படத்தை வாங்கி வெளிச்சத்துக்கு முன் வைத்து உற்றுப்பார்த்தார். எலும்புக் கூடு தெளிவாக தெரிந்தது. அதற்குப் பின்னர் தான் அவருக்கு ஞாபகம் வந்தது.

"அடடே ...நீ வெஸ்கட்ராமனின் பிள்ளையடா... வா வா வந்து உட்கார் என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை நூலக சங்கத்தின் பொன் விழாவும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கம் , யாழ். மாநகர சபை ஆகியன இணைந்து நடத்தும் இலங்கை நூலகச் சங்கத்தின் பொன்விழா நிகழ்வும் தகவலுக்கான வாய்ப்பினை வழங்கலும் மக்களை வலுவூட்டலும் என்னும் விடயம் பற்றிய பிராந்தியக் கருத்தரங்கும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இலங்கை நூலக சங்க தலைவர் உபாலி அமரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ , யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி யாணையாளர் திருமதி ம.வசந்தகுமார் , யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் பேராசிரியர் மா. சின்னத்தம்பி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)

# பொலிஸ் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கான நடமாடும் சேவையொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தேசிய அடையாள அட்டை , கடவுச்சீட்டு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சிறு குற்றங்கள் , மத்தியஸ்தர் சபையினால் இதுவரை தீர்வு காணப்படாத பிரச்சினைகள் என்பவற்றிக்கும் இந்நடமாடும் சேவையின் போது தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

இணுவில் , சுன்னாகம் மற்றும் உடுவில் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நடமாடும் சேவையில் மக்கள் கலந்து கொண்டு தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## க.பொ.த. உயர்தரத்திற்குரிய சித்திரபாட மாதிரி வினாத்தாள்

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப்பயிற்சி நிறுவனம் 2010 பரீட்சைக்கு தயாராகும் க.பொ.த. உயர்தர மாணவருக்காக சித்திரபாட மாதிரி வினாத்தாள் ஒன்றை www.iatart. webs. com என்ற இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளதாகவும் இதனை கட்டணம் எதுவுமின்றி இலவசமாக பார்வையிட முடியும் என்றும் நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார். (6-4)

# இராசி பலன்

30.07.2010
(ஆடி 13, வெள்ளிக்கிழமை)
சதுர்த்தி பிற்பகல் 2.51 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 7.53 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
கைதடிச் சிவன் கொடியேற்றம்,
சங்கடஹர சதுர்த்தி விரதம்.

| | |
|---|---|
| மேடம் | பிறருக்கு உதவி செய்தல், காரிய அலைச்சல், சயனசுகக் குறைவு, சுபசெலவு. |
| இடபம் | குடும்ப மகிழ்ச்சி, தெய்வ தரிசனம், தொழில் நன்மை, பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | பிறர் உதவி, முயற்சி கைகூடும், தெய்வசிந்தை, நல்ல செய்தி. |
| கடகம் | உஷ்ணநிலை, கட்டுப்பாடு, பயணம், புதிய முயற்சி. |
| சிங்கம் | அபகீர்த்தி, போசன சுகம், காரிய தடங்கல், உடல் நலக்குறைவு. |
| கன்னி | களஸ்திர நன்மை, தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், தன வருவாய். |
| துலாம் | தெய்வசிந்தை, சுபசெய்தி, தொழில் நன்மை, முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | குடும்பக் கவலை, அதிக செலவு, பித்தரோகம், முயற்சி தாமதம். |
| தனுசு | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், நல்ல முயற்சி, போசன சுகம். |
| மகரம் | கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, கலந்துரையாடல், தனவருவாய். |
| கும்பம் | கடின வார்த்தை, முயற்சி தாமதம், கௌரவக்குறைவு, திடீர் நன்மை. |
| மீனம் | உறவினர் சந்திப்பு, நல்ல முயற்சி, போசனசுகம், |

வளவன்

# அதிபர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான டெங்கு ஒழிப்பு சிரமதானம் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (4)

# நூலக திறப்பு விழாவும் புத்தகக் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி முருகானந்த மகா வித்தியாலய நூலக திறப்பு விழாவும் புத்தக கண்காட்சியும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டாவளை பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலய நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.சின்னராசா கௌரவ விருந்தினர்களாக கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ. இராஜகுலசிங்கம் , கிளிநொச்சி வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

# பேசும் படம்




இளம் கன்று பயமறியாது....

காட்சி-மானிப்பாய் வீதி

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 100 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 60 | 70 | 70 |
| கரட் | 120 | 130 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 120 | 140 | 150 |
| பீற்றூட் | 50 | 70 | 60 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 130 |
| போஞ்சி | 90 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |

# தமிழ்ப்பெண்கள் பஞ்சாபி அணிவதை தமிழ் கலாசாரமாகக் கருதவேண்டும்

## விவாத அரங்கு

## "மினரல் வோட்டர்" போன்றது தான் பெண்களின் பஞ்சாபி ஆடை

18.07.2010 அன்றைய தங்களின் ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் பெண்பிள்ளைகள் பஞ்சாபி அணிவது குறித்து எனது கருத்தை முன் வைக்க விரும்புகிறேன்.

பெண் பிள்ளைகளின் ஆடைக் கலாசாரம் பற்றி நாம் அதீத கவனம் செலுத்த வேண்டும் என்பது மிகவும் முக்கியமான விடயமாகும்.

அவ்வகையில் தமிழ்ப் பண்பாட்டின் ஆடைக்கலாசாரம் என்பது எமது மனங்களில் ஆழமாக பதிந்து விட்டது. இதன் காரணமாக அதிலிருந்து விடுபடுவது மன உளைச்சலைத் தரும் விடயம் என்பதை மறுப்பதற்கில்லை.

அதேநேரம் கலாசாரம், நாகரிகம் என்பன அசைவடையக் கூடியவையும் மாற்றமுறக்கூடியவையும் ஆகும்.

உதாரணமாக ஒரு காலத்தில் தமிழர், தமிழ் வைத்தியமான சித்த வைத்தியத்தில் மட்டுமே தங்கியிருந்தனர்.

ஆனால் ஆங்கில மருத்துவத்தின் வேகமான வளர்ச்சியும், ஆய்வுகளும், ஆங்கில மருத்துவத்தை உலகம் முழுவதும் பரப்பியது.

அதனை தமிழர்களாகிய நாமும் ஏற்றுக்கொண்டோம். அவ்வாறு ஆங்கில மருத்துவத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் சித்த மருத்துவத்தை நிராகரித்து விட்டதாக எவரும் எண்ணி விடலாகாது.

சித்த மருத்துவத்தில் இருக்கக் கூடிய சிறப்புக்களை கடந்த உன்னதங்கள் ஆங்கில மருத்துவத்திலும் உண்டு.

எனவே எங்களிடம் இல்லாத -வேறு இடத்தில் இருக்கக்கூடிய சிறப்புக்களை நாம் உள்வாங்கிக் கொள்வதில் எந்தத் தவறும் இருக்க முடியாது.

இது போன்றுதான் எங்கள் தமிழ் பெண்களின் ஆடைக் கலாசாரமும் அமையும். சூழ்நிலை என்ற விடயம் தற்போது எங்கும் எதிலும் வியாபகம் பெற்றிருப்பதை காண முடிகின்றது.

சன் தொலைக்காட்சியில் அரசி என்ற மெகாத் தொடர் நாடகம் பின்னாளில் செல்வியாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு இலட்சக்கணக்கானவர்களின் அபிமானத்தைப் பெற்றுக்கொண்டது.

அரசி என்ற பெண்ணின் பிறழ்வான பிறப்பாக செல்வி என்ற பாத்திரம் சிருஷ்டிக்கப்படுகின்ற போதிலும், அது சூழ்நிலை என்பதன் ஊடாக ஏற்றுக்கொள்ளப் படுவதையும் நியாயப்படுத்தப்படுவதையும் காண முடிகின்றது.

ஆக, சூழ்நிலை என்பதை நாம் கவனத்தில் கொள்வது மிகவும் கட்டாயமானதாகும். அதாவது, ஒரு காலத்தில் தமிழ்ப் பெண்கள் குறுக்குக்கட்டாக சேலை அணிந்தனர். அந்தக் காலத்தில் அதுவே ஏற்புடையதாக இருந்தது.

எனினும் காலமாற்றம், நாகரிக சிந்தையோட்டம் என்பவற்றின் காரணமாக குறுக்குக்கட்டு கலாசாரம் முற்றுப்பெற்றது.

இவையெல்லாம் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையாலே ...என்ற கால அசைவின் நியமத்திற்கு ஏற்ப ஏற்புடையவையாகும்.

அந்த வகையில் வட இந்திய இந்து இளம் பெண்களின் உன்னதமான ஆடையாகக் கருதப்படும் பஞ்சாபி (சுடிதார்) எங்கள் கலாசாரத் தோடும் கலந்து கொண்டது.

தமிழ்ப் பெண் பிள்ளைகள் பஞ்சாபியை அணிவதற்கு நாமும் இந்துமதம் சார்ந்தவர்களாக இருப்பது மூல காரணமாகும்.

அதே நேரம் எங்கள் கலை ,கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கும் இந்திய தேசத்தின் கலை, கலாசார விழுமியப் பண்பாட்டிற்கும் இடையே நிறையத் தொடர்புண்டு. அவ்வகையிலும் பஞ்சாபி எங்கள் ஆடைக் கலாசாரத்திற்குள் நுழைந்து கொண்டது. அதற்கு ஏகப்பட்ட வரவேற்பும் இருந்தது.

பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பான ஆடையாக மட்டுமன்றி வேலைத் தளங்கள் மற்றும் போக்குவரத்து,மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி என்பவற்றை ஓட்டிச் செல்வதற்கும் பஞ் சாபியை விட பாதுகாப்பான வேறு ஆடைகள் எதுவும் இல்லை என்னும் அளவிற்கு அதன் பெறுமதி உணரப்படுகின்றது.

இவையாவற்றிற்கும் மேலாக ஒரு ஆடையின் சிறப்பு என்பது அணிவோரிடம் மட்டுமன்றி பார்ப்போரின் மன நிலையில் ஏற்படக் கூடிய மாற்றங்களை வைத்தும் அளவிடப்படுவதாகும்.

இதன் அடிப்படையில் நோக்கும் போது பஞ்சாபி, அணிவோருக்கும் பார்ப்போருக்கும் விரசம் இல்லாத பக்குவமான மன நிலையை ஏற்படுத்தக்கூடிய இயல்பைக் கொண்டதாகும்.

இதுவே இந்த ஆடையின் சிறப்பம்சமாகும். எனவே இளம் தமிழ்ப் பெண்கள் பஞ்சாபி அணிவதை ஏற்றுக்கொள்ளவும், அங்கீகரிக்கவும் வேண்டும்.

எங்கள் கிணற்றுத்தண்ணீரை விடுத்து மினரல்வோட்டர் குடிக்கலாம் என்றால்-அதுவே பாதுகாப்பானது என்றால்- அதுவே டீசன்ட் என்றால் பஞ்சாபியும் அப்படித்தான் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**காருண்யன்**

---

**18.07.2010 அன்று வெளியான வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம்**

## பஞ்சாபி ஆடைக் கலாசாரம் உள்வாங்கக் கூடியதா?

பஞ்சாபி என்ற பெண்களின் ஆடை யாழ்ப்பாணத்தில் மிக வேகமாக ஆக்கிரமித்து வருகிறது.

வடஇந்தியாவில் ஹிந்திப் பெண்களால் அணியப்படும் பஞ்சாபி தமிழகத்திற்குள் நுழைந்து தற்போது இலங்கைத் தமிழர்களிடமும் கணிசமாகச் செல்வாக்குச் செலுத் துகின்றது.

ஹிந்துப் பண்பாட்டில் பெண்களுக்கான மிகவும் உன்னதமானதும் பாதுகாப்பானது மான ஆடையாக பஞ்சாபி கருதப்படுகின்றது.

பெண்களின் அங்கங்கள் முழுமையாக மறைக்கப்படுவதற்கும் மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச் சக்கர வண்டி போன்ற வாகனங்களில் பயணம் செய்வதற்கும் பஞ்சாபி ஏற்ற உடையாக அங்கு கருதப்படுகின்றது.

பொதுவில் சிறப்பியல்புடைய ஆடைக் கலாசாரம் ஏனைய கலாசாரங்களுக்குள் உட்புகுந்து, முதன்மையான இடத்தைப் பிடித்துக் கொள்ளும். இது உலக இயல்பாயிற்று.

இலங்கையில் தற்போது முழுமையாக அணியப்படும் ரவுசர் கூட, தான் கொண்டிருந்த சிறப்பான இயல்பு காரணமாகவே எங்கள் பண்பாட்டில் புகுந்துகொண்டது.

நாளாந்தம் வேட்டியை அணிந்து கொண்டு கடமையைச் செய்வது என்பது அசௌகரியங்களுக்குரியது.

ஆனால் அந்த அசௌகரியங்களையும் ரவுசர் நீக்கிவிடுகின்றது.

இதன் காரணமாகவே இன்று இளையவர் முதல் முதியவர் வரை ரவுசரின் ஆக்கிரமிப்பிற்குள் அகப்பட்டுள்ளனர்.

இது போன்றுதான் பஞ்சாபியும்.

இருந்தும் பஞ்சாபி அணிவது உடன்பாடானது அல்ல. அது எங்கள் கலாசாரத்திற்கு உகந்த தல்ல என்ற வாதத்தை கலாசாரம் குறித்து பிரஸ்தாபிப்போர் முன்வைக்கின்றனர்.

அதேநேரம் பஞ்சாபி இளம் பெண்களுக்கு ஏற்ற - பாதுகாப்பான உடை.



எங்கள் இளம் பெண்கள் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் செல்வதற்கும் துவிச்சக்கர வண்டியில் பயணிப்பதற்கும் பஞ்சாபியை விட பாதுகாப்பான ஆடை ஏதும் உண்டா என்று கேள்வி எழுப்புகின்றனர்.

இங்குதான் பஞ்சாபியை ஏற்றுக் கொண்டு அதனை எங்கள் கலாசாரத்திற்குள் உள்வாங்குவதா? அல்லது அதனை நிராகரிப்பதா? என்ற வாதம் எழுகின்றது.

பஞ்சாபியை நிராகரித்தால், பெண்கள் ரவுசர் அணியும் ஆபத்தும் உண்டென்பது பஞ்சாபிக்கு ஆதரவாகக் குரல் கொடுப்போரின் எச்சரிக்கை.

இஞ்சியைக் கொடுத்து மிளகாயை வேண்டும் நிலை உருவாகுமென்ற அவர்களின் எச்சரிக்கையின் மத்தியில்,

பஞ்சாபியை ஏற்று அதனை ஆலயங்களுக்கு அணிந்து செல்லலாமா என்பதை அறிஞர் குழாம் கூடி முடிபெடுக்க வேண்டும். அதற்கான வாதத்திற்கு களம் திறக்கப்படும்.

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான கணித செயல் நூல் வெளியீட்டு விழா அண்மையில் யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் தலைமையுரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை வங்கி பருத்தித்துறைக்கிளை முகாமையாளர் திருமதி சுமங்கலா பிரபாகரன் வடமராட்சி கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்ப லிங்கத்திடமிருந்து முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வதையும் வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் மாணவர்களுக்கு கணித செயல் நூல்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-அல்வாய் நிருபர்)

# தேசிய விஞ்ஞான கொள்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

இலங்கையில் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் தயாரிக்கப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப தேசிய கொள்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண வினால் கையளிக்கப்பட்டது.

இலங்கையில் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சிதுறையை மேம்படுத்துவதற்காக செயற்பட்ட ஆராய்ச்சியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு அலரிமாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அந்த நிகழ்வுக்கு பின்னரே அமைச்சர் தேசிய விஞ்ஞான கொள்கையை கையளித்துள்ளார்.

விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளின் மூலமாக இலங்கை யில் பொருளாதார அபிவிருத்தியின் வேகத்தை அதிகரிக்கும் வகையிலேயே தேசியக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதற்காக ஏற்றுமதி செய்யப்படுகின்ற இல்மனைட், இறப்பர் மற்றும் விவசாய கழிவுப் பொருட்கள், நானோ தொழில்நுட்பத்தின் மூலமாக அவற்றை பெறுமதிமிக்கதாக மாற்றி பொருளாதார அபிவிருத்திக்காக பயன்படுத்துவது தொடர்பிலும் அந்த கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6)

# மட்டு.வாகரையில் நேற்று 70 குடும்பங்கள் மீள் குடியேற்றம்

(கொழும்பு)

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று 70 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2006 இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து கதிரவெளி, சித்தாக்கேணி , பால்சேனை, வம்மி வெட்டுவான் போன்ற பகுதிகளில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் இவர்கள் தங்கியிருந்தனர்.

சுமார் 5 வருடங்களின் பின்னர் இவர்கள் மீள் குடியமர்த்தப்பட்டனர். நேற்று காலை கதிரவெளியிலிருந்து புறப்பட்டுச் சென்ற இவர்களை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், பிரதேச செயலாளர், படையதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டு வழியனுப்பி வைத்தாகவும் தோணிதாண்டமடு கிராமத்தில் இவர்கள் மீள் குடியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# யாழ்.பொதுசன நூலகத்திற்கு பௌத்த நூல்கள் கையளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். பொதுநூலத்திற்கு கண்டி மல்வத்த விகாரையின் தலைவர் நேற்று நண்பகல் 1.30 மணிக்கு ஒரு தொகுதி பௌத்த நூல்களை யாழ். பொதுசன நூலகரிடம் கையளித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட கண்டி மல்வத்த விகாரையின் தலைவர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் யாழ். பொதுநூலகத்திற்கு நேற்று நண்பகல் 1.30 மணிக்கு ஒரு தொகுதி பௌத்த நூல்களை அன்பளிப்பாக யாழ். பொது சன நூலகர் எஸ்.தனபாலசிங்கத்திடம் கையளித்தார்.

அத்துடன் யாழ். பொதுநூலகத்தின் விருந்தினர் ஏட்டிலும் கையொப்பமிட்டார்.

இந்நிகழ்விற்கு கண்டியில் இருந்து இவருடன் வருகை தந்த ஆறு பௌத்த தேரர்களும், யாழ்.குடாநாட்டு இராணுவ உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இக்குழுவினர் ஆரியகுளச் சந்தியில் அமைந்துள்ள நாகவிகாரை உட்பட யாழ்ப்பாணத்தில் பல இடங்களையும் பார்வையிட்டதாகத் தெரிவித்தனர். (2-51)

## ஓராண்டு நினைவலைகள்



திருமதி.கந்தையா மகேஸ்வரி

திதி:- சதுர்த்தி 30.07.2010

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 16.06.1922 | 10.08.2009 |

ஆண்டொன்று கடந்த போதிலும் அன்னையே
அன்பு நிறைந்த உன் முகம் மறையவில்லை எமைவிட்டு
தந்தையை இழந்து நாமிங்கு தவித்தவேளை
தளராத மனம் கொண்டு
பார் போற்ற ஆளாக்கினாய் எம்மவரை சீருடனே
நான்கு தலைமுறையுடன் உறவாடிய பெருமை
என்றுமே உன்னையே சார்ந்திடும்
பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய எம் அன்னையே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உம் நினைவு எமை விட்டகலா
வேண்டுகின்றோம் இறையடியை என்றும் அன்னையே
மறவாத உன் நினைவுகளுக்காய்.

MPCS ஒழுங்கை,
கோப்பாய்

2041

குடும்பத்தினர்

## மாகாணக் கல்வித்திணைக்களம், வடக்கு மாகாண சபை

### வடமாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல்

வடமாகாண பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறை காரணமாக இம் மாகாணத்தில் கற்பிக்கும் ஏனைய பாட ஆசிரியர்களிலிருந்து ஆங்கிலத்தில் புலமையுள்ள ஆசிரியர்களை, ஆங்கிலம் கற்பிப்பதற்கு பயிற்றும் முகமாக மாகாணக்கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பயிற்சி நெறியொன்றை நடாத்துவதற்கு முன் வந்துள்ளது.

இப்பயிற்சி நெறி *வார இறுதி நாட்களில்* நடாத்தப்படும் . இத்திட்டத்தின் அடிப்படையில் ***ஆங்கில ஆசிரியர் அல்லாத 120 ஆசிரியர்களை ஒரு தெரிவுப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு 60 பேருக்கு யாழ்ப்பாணத்திலும் மிகுதி 60 பேருக்கு வவுனியாவிலும்*** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில கற்பித்தற் பிரிவு ***10 மாத கால பயிற்சி நெறி*** ஒன்றினை நடாத்தவுள்ளது.

பயிற்சி நெறியின் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறிக்கான கட்டணம் முழுவதையும் வடமாகாணக்கல்வித் திணைக்களமே பொறுப்பேற்றகவிருக்கின்றது.


இது சம்பந்தமான விபரங்கள், விண்ணப்பப் படிவங்கள் என்பவற்றை வடமாகாணத்திலுள்ள சகல வலயக்கல்வி அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்வமுள்ள ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ***இறுதித் திகதி 15.08.2010***

வீ. இராசையா,
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.
28.07.2010

(இ)





பாடசாலை ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ள டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்பாக வலிகாம வலயப் பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு நேற்று வலிகாம வலயக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் கலந்துகொண்ட பாடசாலை அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# யாழ்.பிரதேச சபையினரின் உதவியுடன் கழிவுகள் அகற்றல்

(நல்லூர்)

செம்மணி வீதிப் பகுதியிலுள்ள வயல் வெளிகளில் கொட்டப்பட்ட கழிவுப் பொருட்கள் நீண்ட நாட்களாகக் கவனிப்பாரற்ற நிலையில் துர்நாற்றம் வீசியதையடுத்து அவ்வீதியூடாக பயணிப்போர் பெரும் சிரமத் தை எதிர்நோக்கிவந்தனர்.

இது தொடர்பாக இப் பகுதி வாழ்மக்கள் இராணுவத்தினரிடமும், யாழ்.பிரதேச சபையிடமும் முறையிட்டதையடுத்து இக் கழிவுகள் யாழ்.பிரதேச சபையினரின் ஒத்துழைப்புடன் எரிக்கப்பட்டது. (2-134)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றுவதற்கு தடை

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இருபாலை கிழக்கு, இருபாலை தெற்கு ஆகிய கிராம சேவையாளர் பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் ஏற்றுவது இருபாலை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் உள்ள உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இருபாலை இராணுவ அலுவலகத்தில் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து இப்பகுதியில் சட்ட விரோத மான முறையில் மணல் ஏற்றி வருவது நிறுத்தப்பட்டது. (2-134)




# பஸ் நேரத்தை மாற்றித்தருமாறு கோரிக்கை

பருத்தித்துறையிலிருந்து புறப்படும் இ.போ.ச. பஸ்சேவையானது தினமும் காலை 8.30 மணிக்கு அம்பன் பகுதியை வந்தடைவதால்; இதில் பயணிக்கும் அம்பன் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் குறித்த நேரத்திற்கு பாடசாலைக்கு சமுகமளிக்க முடியவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

பருத்தித்துறையிலிருந்து புறப்படும் பஸ் சேவையானது தினமும் காலை 8.30 மணிக்கு அம்பனை வந்தடைகின்றது. இதனால் அம்பன் பாடசாலையில் கல்வி பயின்று வரும் மாணவர்களும், அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் 8.30 மணிக்கு பின்னரே பாடசாலைக்குச் செல்கின்றனர். இதனால் முதலாவது பாடவேளை தாமதமடைவதாகவும் இது தொடர்பாக பருத்தித்துறை இ.போ.ச. முகாமையாளரிடம் பெற்றோர்களும் பாடசாலை சமுகமும் பல தடவைகள் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அம்பன் பாடசாலைக்கு செல்வோர் உரிய நேரத்திற்கு சமுகமளிக்க ஆவன செய்துதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாதிக்கப்பட்ட
ஆசிரியர்களும் மாணவர்களும்

# உள்நாட்டு உற்பத்திகளுக்கு உலக சந்தையில் உயரிய விலையைப் பெற்றுக்கொடுக்க திட்டம்

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் சர்வதேச சந்தையில் போட்டி அடிப்படையில் தமது உற்பத்திகளுக்கு உயரிய விலைகளைப் பெற்றுக் கொள்ளும் ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துகொடுத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போது ஜீ.எஸ்.பி. வரிச் சலுகை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் கூறியதாவது, வரிச் சலுகை பெறுவதற்காக நாம் நம் நாட்டின் கௌரவத்தை விலை பேசத் தயாரில்லை என்பதை நாம் ஏற்கனவே கூறிவிட்டோம். எமது உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க உரிய பின்னணியையும் நாம் தயார் செய்தோம்.

அதன்படி அமெரிக்க டொலரின் பெறுமதியை ஒரே நிலையில் பேணிக்கொண்டு எமது அடிப்படைப் பொருளாதாரத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இன்று எமது நாட்டின் நிதித் திரட்டு வரலாற்றில் முதற் தடவையாக 6.2 வீதமாக உயர்ந்துள்ளது.

இதனை நாம் இவ் வருட இறுதியில் 6.5 ஆக உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார். (6)

# புதிய கிளை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

டிரேட் பினான்ஸ் அன்ட் இன் வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட் நிறுவனம் தனது கிளையை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 2 ஆம் திகதி முற்பகல் 9.15 முதல் 10.15 மணி வரையுள்ள சுபவேளையில் இல.74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருவருள்மிகு கைதடி வீரகத்திப்பிள்ளையார் முதலாய ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமி ஆலய மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பகல் 10.15 மணிக்கு கொடியேத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 7 ஆம்திகதி சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறமும், 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை பகல் 11.45 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (4)

# சைவசித்தாந்த ஆய்வுரை

(கொழும்புத்துறை)


திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியற் கல்லூரியின் பண்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில், சைவ சித்தாந்தத்தைப் பயில்கின்ற மாணவர்கள் மற்றும் அதனோடு ஈடுபாடு உடையவர்களுக்கு உதவும் பொருட்டு நாளையும் நாளை மறுதினமும் காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை கலைத்தூது கலையகத்தில் சைவ சித்தாந்த ஆய்வுரை இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது, மெய்கண்ட தேவர், உமாபதி சிவாச்சாரியார் ஊடாக முப்பொருள் விளக்கம் என்னும் பொருளில் ஆய்வுரை இடம்பெறும். (2-51)





யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆங்கில தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யுனிசெப் நிறுவன யாழ்.கிளையின் கல்விக்கான விசேட அதிகாரி சாஜிட் ஸ்மாயில், பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினர் மற்றும் பீடாதிபதி ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.



யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய "ஈழத்துக் கலை இலக்கிய உலகு- விமர்சனக் கட்டுரைகள்" நூலின் அறிமுக நிகழ்வு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூலின் சிறப்புப் பிரதியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவிடமிருந்து நாடகக் கலைஞர் எஸ்.ரி.அரசு பெறுவதையும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு மற்றும் நூலாசிரியர் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## அறிவுறுத்தல் கூட்டம்

(அல்வாய்)

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் கடமைகளைப் புரியும் இணைப்பு நிலைய உத்தியோகத்தர், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர், உதவிப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கல்வி அமைச்சின் உதவிப் பரீட்சை ஆணையாளர்கள் சமுகமளித்து அறிவுறுத்தல்களை வழங்கவுள்ளனர். (6-19)

## பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை 3மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் சொ.ஹரிசங்கர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிதெற்கு பிரதேச உதவித்திட்டமிடல் பணிப்பாளர் சு.சிவகுமாரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் தெற்கு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா, வலிகாம கல்வி வலய வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர் திருமதி பி.அம்பிகைபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

## கலந்துரையாடல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க உடுவில் பிரிவின் அவசர கலந்துரையாடல் நிகழ்வு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் அமைந்துள்ள (உடுவில் பிரிவு) தற்காலிக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் எதிர்கால தொண்டு நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பாக சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியுள்ளதால், அன்றைய தினம் உடுவில் பிரிவு நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் பகுதிகளின் செயலாளர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கச் சேவையின் பிரிவத் தலைவர் அறிவித்துள்ளார். (2)

## உபதபாலகம் இடமாற்றம்

(குடத்தனை)

குடத்தனைப் பகுதி பருத்தித்துறை வீதியில் இயங்கிவந்த உப-தபாலகமானது தற்போது குடத்தனைப் பொற்பதி வீதியில் இயங்கி வருகின்றது. (2)

## கருகல் நோயினால் வெங்காயப் பயிர் பாதிப்பு

(மாதகல்)

மாதகல் பகுதியில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிரில், கருகல்நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் வெங்காயத்தின் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

மாதகல் பகுதியில் இப்போகத்தில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிரில் கருகல் நோய் பீடிக்கப்பட்டுள்ளதால், பயிரின் வளர்ச்சியும் விளைச்சலும் குறைவடைந்துள்ளது.

அத்துடன் அதிக வெப்பம்,வரட்சி காரணமாக வேறுபல நோய்த் தாக்கங்களுக்கு உட்படுத்தப்படுவதாகவும் விவசாயத் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சந்தை நிலைவரத்தின் படி வெங்காயத்திற்கான கேள்வி அதிகரித்த நிலையில் மேற்குறித்த நோயின் தாக்கம் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் முன்னைய போகத்தில் நல்ல வருமானத்தினை பெற்ற விவசாயிகள் இப்போகத்திலும் அதிக விளைச்சலைப் பெற பயிரிட்டமை குறிப்பிடத்தக்கது.விவசாயிகள் வெங்காயப் பயிர்களை நோய்களில் இருந்து பாதுகாக்கப் பெருமளவில் பீடை நாசினிகளை விசிறி வருகின்றனர். (2)

## குன்றும் குழியுமாக காணப்படும் குடத்தனை- பொற்பதி வீதி மக்கள் பெரும் அசௌகரியம்

(குடத்தனை)

குடத்தனை- பொற்பதி வீதியானது குன்றும் குழியுமாகக் காணப்படுவதாகவும் இவ் வீதியால் பயணிப்பதில் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குடத்தனை பொற்பதி வீதியானது நீண்டகாலமாக செப்பனிடப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இப்பகுதி போக்குவரத்து நெரிசல் நிறைந்த பகுதியாகையால் இப்பாதையால் பயணிக்கும் பாதசாரிகள் பெரும் இடர்களை எதிர்நோக்குகின்றனர்.

குன்றும் குழியுமாகக் காணப்படும் இப்பாதையூடாக செல்லும் வாகனங்கள் பயணிக்க முடியாது பெரும் சிரமத்தை எதிர்கொள்வதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தி இப் பாதையை சீர் செய்து தருமாறு அப்பகுதி வாழ்மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (6-2)

## புதிய நிர்வாக சபை தெரிவு

(நவாலி)

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இயங்காமல் இருந்த நவாலி வடக்கு சனசமூக நிலையம் அண்மையில் புதிய நிர்வாகிகளின் தெரிவுடன் மீளவும் புத்துயிர் பெற்று இயங்க ஆரம்பித்துள்ளது.இது தொடர்பாக மேலும் அறிய வருவதாவது,

மூன்று ஆண்டுகளாக நவாலி வடக்கு சனசமூக நிலையமானது இயங்காமல் மூடப்பட்டிருந்தது.

தற்போது புதிய நிர்வாகத் தெரிவுடன் இயங்குகின்றது.

இதில் புதிய நிர்வாகத்தின் போசகராக செ.ரமேஷ், தலைவராக கி.ஆனந்த், செயலாளராக கு.சசிகுமார், பொருளாளராக இ.சிறிரமணன், உப தலைவராக டாக்டர் சுந்தர் ராஜன்,உப செயலாளராக ச.சதன், ஆகியோர் தெரிவுசெய்யபட்டதுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக மேலும் 5 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (2)

## பொதுக்கூட்டமும் உதவித்திட்ட ஆரம்ப நிகழ்வும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் அரையாண்டிற்கான பொதுக் கூட்டமும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான மாதாந்த உதவித் திட்ட ஆரம்ப நிகழ்வும் நாளை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இரவு வேளைகளில் வணிக நிலையங்களுக்கான பாதுகாப்பு தொடர்பாக ஆராய்தல்; வியாபார முன்னேற் றத்திற்காக கடன் வழங்குவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளல், நகரை சுத்தமாகப் பேணுதல் மற்றும் வணிக மன்றில் அங்கத்துவம் பெறாதவர்கள் பற்றிய முடிவுகளும் எடுக்கப்படவிருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளமாறு வணிக மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (2-29)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வியாவில் பதி ஆதிஷேத்ரம் திருவருள் மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ர ஐயப்ப சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் நாளை சனிக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கல்யாணமும் இடம்பெறவுள்ளது. (6-4)

## உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் துளசிதாசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான மாபெரும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டு கழகமும் மாலை 4.30 மணிக்கு இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து றேஞ்சல் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

இதில் நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு உடுப்பிட்டி யூத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு பொலிகை பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து டயமன்ஸ் B விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் டயமன்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (6-4)






## வினாடி வினா போட்டி

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலியா நாட்டின் அனுசரணையுடன் நடத்தப்படும் அவுஸ்திரேலியா இரசாயனவியல் வினாடி வினாப் போட்டி நாளை சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இப் போட்டியில் பங்குபற்றுவதற்கு பதிவுசெய்யப்பட்ட மாணவர்களையும், அவர்களை வழிநடத்தும் ஆசிரியர்களையும் காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இரசாயனவியற்றுறை மண்டபத்திற்கு முன்பாக ஒன்றுகூடுமாறு இரசாயனவியற்றுறை தலைவரும் இப் பரீட்சையில் யாழ்.மாவட்ட பிரதம பரீட்சகருமான கலாநிதி இ.ஸ்ரீகரன் கேட்டுள்ளார். (4)


வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதி செயலாளர் கே.பொன்னம்பலம் யாழ்.கலட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். இதில் பிரதிச் செயலாளர் மற்றும் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் பாடசாலை அதிபர் எஸ்.ரவீந்திரராஜ் உடன் கலந்துரையாடுவதையும் பிரதிச் செயலாளர் உரையாற்றுவதையும் பாடசாலை ஆசிரியர் மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)

## முல்லை ,கிளிநொச்சி வாக்காளர் பதிவுக்கு கால எல்லை நிர்ணயிக்கப்படவில்லை

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள் குடியேறும் மக்கள் வாக்காளர்களாக தம்மைபதிவு செய்வதற்கான கால எல்லை இது வரை நிர்ணயிக்கப்படவில்லை எனவும் மீள் குடியேறும் மக்கள் தொடர்ந்து தமது கிராம சேவகர் ஊடாக பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் கிளிநொச்சி , முல்லைத்தீவு மாவட்டங்களின் உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். கருணாநிதி தெரிவித்துள்ளார்.

வாக்காளர்பதிவு தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வாக்காளர் பதிவுகள் எவையும் இடம்பெறாமையால் இவற்றை மேற்கொள்வது மிகவும் கடினமாகவே உள்ளது. அது மட்டுமன்றி கிராம சேவையாளர்களும் இது தொடர்பாக பூரண விளக்கம் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். வன்னியில் மீள் குடியேற்றம் இடம்பெற்றுவருகின்றமையால் வாக்காளர்களை பதிவு செய்வதற்கான கால எல்லையை உடனடியாக அறிவிக்க முடியாது. அது பற்றி விரைவில் அறிவிக்கப்படும் என்று அவர் கூறினார்.

தற்போது வன்னியில் மீள் குடியேற்றம் இடம்பெற்று வருகின்ற நிலையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தற்காலிகமாகத் தேர்தல் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டு உதவித் தேர்தல் ஆணையாளராக எஸ். கருணாநிதி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் கொழும்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.. (6)

## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

அ.ற்லஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கண்டி மல்வத்துபீட மகாநாயக்க சங்கைக்குரிய திப்புட்டுவாவ ஸ்ரீ சுமங்கல தேரரால் யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி , தென்மராட்சி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இதில் தென்மராட்சி ,வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த 90 பாடசாலைகளில் கல்வி பயிலும் 470 மாணவர்களுக்கு 15 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் நேற்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பௌத்த குருமார்கள் , இராணுவ அதிகாரிகள் ,கல்வி வலயப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (2-7-24)

## சட்டவிரோத குடியேற்றவாசிகளால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் சட்டவிரோத குடியேற்றவாசிகளால் தேவையற்ற பிரச்சினை ஏற்படுவதாக மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தின் கல்வியாளரான ஹரி வினாஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அவுஸ்திரேலியா எல்லைப்புறத்தை பாதுகாப்பதிலும் அகதிகள் விடயத்தை விவாதிப்பதிலும் தோல்வி கண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படகுப் பயணம் மிகவும் அபாயகரமானது என்றும் கடத்தல் காரர்களால் அரசியல் நோக்கம் கொண்டு மக்கள் அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து வரப்படுகிறார்கள் என்றும் இந்த நிலையில் அவுஸ்திரேலியா தமது எல்லைப் புறங்களையும் கடற்பிராந்தியங்களையும் பாதுகாக்க வேண்டியது அவசியமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சித்திரவதைக்கு உள்வாங்கப்படாமல் வரவேற்கப்படுவது அகதிகளின் அதிகரிப்புக்கு காரணம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அகதிகளின் வருகையால் அவுஸ்திரேலியாவுக்கு தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6-4)

# அரச ஊழியர்களின் சம்பளமுரண்பாட்டை நீக்குவதற்கு ஜனாதிபதியினால் குழு நியமனம்

அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொழிற்சங்கக் குழுவொன்றை நேற்று முன்தினம் நியமித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் ஜனாதிபதி அரச மற்றும் தனியார் துறை தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினர்ர்.

வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு பிரேரிக்கப்படுவதற்கு முன்னதாக ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்ய வேண்டுமென வலியுறுத்திய ஜனாதிபதி, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஏழு பேர் கொண்ட குழுவொன்றை உடனடியாக நியமித்தார்.

அதேநேரம் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு முன்னதாக அறிக்கையினைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அந்தக் குழுவைக் கேட்டுக் கொண்டார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற வரவு செலவுத் திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் நாடுமுழுவதிலுமிருந்து அரச மற்றும் தனியார்துறை தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் 300 பேர் கலந்து கொண்டனர்.

வரவு செலவுத் திட்ட யோசனைகள் மற்றும் தொழிற்சங்கப் பிணக்குகள் தொடர்பாக நேற்று முன்தினம் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரி வித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் , சம்பள உயர்வு தொடர்பாக ஆலோசனைகளை முன்வைத்தனர்.

அதற்குக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி என்னதான் சம்பள உயர்வு வழங்கினாலும் சம்பள முரண்பாடு நிலவுவதன் காரணமாக சாதகமான நிலையைக் காணமுடியாதுள்ளதென்றும் ஆகவே முதலில் சம்பள முரண்பாட்டை நீக்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டினார்.

இதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக உடனடியாகவே குழுவொன்றை ஜனாதிபதி நியமித்தார். மலையகப் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் நேற்று முன்தினம் நடை பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

பெருந்தோட்டப் பகுதிகளின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுப்பதாக அவர்களிடம் ஜனாதிபதி உறுதியளித்துள்ளதுடன் தொழிற்சங்கத் தலைவர்களிடம் ஆலோசனை பெறாமல் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில்லை என்றும் அவர்களிடம் கூறினார். (6-2)

## 19 இலங்கை மாணவர்கள் சீனாவுக்கு பயணம்

சீனாவின் சங்ஹாய் நகரில் நடை பெறவுள்ள 2010 ஆம் ஆண்டுக்கான இளைஞர் நட்புறவு முகாமில் இலங்கை சார்பாக 19 மாணவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இது தொடர்பாக அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி மாணவர்களுக்கான விமான டிக்கெட்டுக்களை வழங்கினார்.

கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் சுதர்ஷினி பெர்னான்டோ புள்ளே உட்பட பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (6-2)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கலைமகள் பாலர் முன்பள்ளி விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப.2.மணிக்கு யாழ். நவாலி மகாவித்தியாலயத்தில் நவாலி வடக்கு சனசமூக நிலையத் தலைவர் சி. ஆனந்த தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கேமலா சிவசோதி கலந்துகொள்வதுடன் சிறப்பு விருந்தினராக நவாலி வடக்கு கிராம சேவை உத்தியோகத்தர் அ. தனபலரத்தினம் மற்றும் முன்பள்ளி கட்டமைப்புச் செய லாளர் திருமதி யோ. கேம நளினி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் கௌரவ விருந்தினராக நவாலி மகாவித்தியாலய அதிபர் இ.வசந்தகுமார் சுழிபுரம் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6)




யாழ். கலைமகள் மாதிரி முன்பள்ளியின் வருடாந்த பாலர் விளையாட்டு விழா அண்மையில் யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதில் வினோத உடைப்போட்டியில் பங்குபற்றிய சிறுவர்களையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வைத்திய கலாநிதி த.துஷ்யந்தன் சிறுமியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் எஸ்.கதிரவேலு)

# கையடக்கத்தொலைபேசிகளில் ஆபாசப்படங்களை தடை செய்வதற்கு துரித நடவடிக்கை

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளின் ஆபாசப் படங்களைத் தடை செய்வது தொடர்பாக பெண்கள் சிறுவர்களுக்கான பொலிஸ் பிரிவு நேற்று முன்தினம் தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழு கொழும்பு பல் கலைக்கழக தகவல் தொழில் நுட்ப சிரேஷ்ட அதிகாரிகள் பம்பலப்பிட்டி சிறுவர் நீதிமன்ற நீதிபதி ஆகியோருடன் கலந்துரையாடல் களை நடத்தியுள்ளது.

சிறுவர் துஷ்பிரயேகத்திற்கு எதிராக அறிக்கை ஒன்றை வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்ததை யடுத்து பெண்கள், சிறுவர்களுக்கான பொலிஸ் பிரிவு இந்த நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரி வித்தன.

சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு எதிரான அறிக்கை ஒன்றை தான் பொலிஸாரிடம் கோரி இருப்பதாக கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

அத்துடன் சிறுவர்களுக்கு எதிரான சகல விதமான துஷ்பிரயோகங்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

பல்வேறு பட்ட முறைப்பாடுகள் தொடர் பாக அமைச்சரவையின் கவனத்திற்கு தான் கொண்டு சென்றிருந்ததாகவும் தனிப்பட்ட முறையிலும் பல முறைப்பாடுகளை தான் பெற்றிருந்தாகவும் நாட்டில் இருந்து சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாமல் செய்வதற் கான சகல முயற்சிகளும் முன்னெடுக்கப் பட வேண்டும் எனவும் அவர் . வலியுறுத்தியி ருந்தார்.

கையடக்கத் தொலைபேசிகளில் ஆபாசப் படங்களை தடை செய்வதற்கான நீதிமன்ற உத்தரவை பொலிஸார் நாடியுள்ள தாகவும் இந்த தொலைபேசிகளில் இலவசமாக ஆபா சப்பட இணையத்தளங்களை பார் க்கக் கூடிய தாக இருப்பதால் துஷ்பிரயோகம் மற்றும் வல் லுறவுச் சம்பவங்கள் அதிகரிப்பதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களில் இளம் பராயத்தி னர் கையடக்கத் தொலைபேசிகளில் ஆபா சப்படங்களைப் பார்க்கும் விடயங்கள் அதி கரித்துள்ளதை அவதானிக்கக்கூடிய தாக இருந்தாக பொலிஸார் கூறுகின்றனர்.

இதற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பொலிஸா ருக்கு உதவுவதற்கு கையடக்கத் தொலைபேசி இயக்குநர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

(6-2)

# மஹோற்சவம்

(சாவகச்சேரி)

நுணாவில் துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ் உற்சவ காலத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும்; மறுநாள் இரவு 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும்; 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும்; மறுநாள் ஆடி அமாவா சைத் தினத்தன்று நண்பகல் 12.30 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும் என்று ஆலய தர்ம கர்த்தா ம.பரமேஸ்வரக் குருக்கள் அறிவித் துள்ளார். (2-29)

# வெளிநாட்டில் பணியாற்றி வரும் இலங்கையர்களுக்கு ஓய்வூதியம்

வெளிநாட்டில் பணியாற்றி வரும் சகல இலங்கையர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கு வது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வூதியத் திட்டம் தொடர்பீல் சவூதி அரேபியாவில் கடமையாற்றி வரும் இலங் கையர்களுக்கு ஏற்கனவே விளக்கமளிக் கப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

சமூகப்பாதுகாப்பு சபையினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

2015ஆம் ஆண்டளவில் நாட்டின் சகல ருக்கும் ஓய்வூதியம் வழங்கும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் நிமால் அம ரசிங்க தெரிவித்துள்ளார்.

இதில் மூன்று வகையான ஓய்வூதியத்திட் டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# தமிழ் கூட்டமைப்பு எம்.பி.சிறிதரன் ஊர்காவற்றுறைக்கு விஜயம்

ஊர்காவற்றுறையில் நீண்ட காலம் எரி பொருள் நிரப்பு நிலையம் இல்லாத குறை பாட்டால் பெரும் இடர்பாடு கள் நிலவுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித் துள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை ஊர்காவற் றுறைக்கு பயணம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஊர்கா வற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஆதார வைத்தியசாலை என்பன வற்றை பார்வையிட்டதுடன் பல நோக்குக் கூட் டுறவுச் சங்க பொது முகாமையாளர், ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி அருணா புண்ணியமூர்த்தி ஆகியோருடன் கலந்துரை யாடினார். இதன்போது ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எரி பொருள் நிரப்பு நிலையம் இல்லாத குறை பாடு நீண்ட காலம் நிலவுவதாகவும் ஏற்க னவே இருந்த எரிபொருள் நிரப்பு நிலையப் பகுதி கடற் படையின் கட்டுப்பாட்டுக்குள் இருப் பதாகவும் இதன் காரணமாக ஊர்காவற் றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வரு மானம் ஈட்டுவதிலும் மக்கள் சேவையை வழங் குவதிலும் பெரும் குறைபாட்டை எதிர் கொள் வதாகவும் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமை யாளர் நாடாளுமன்ற உறுப்பி னர் சிறிதரனி டம் கவலை தெரிவித்தார். எனவே நாடாளு மன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் இக் குறைபாட்டை நீக்க முன்வர வேண்டு மென மேலும் அவர் சிவஞானம் சிறிதர னிடம் வேண்டுகோள் விடுத்தார். (ச)

# தம்மை விடுதலை செய்ய பரிந்துரைக்குமாறு பீடாதிபதிகளுக்கு தமிழ்க் கைதிகள் கடிதம்


(கொழும்பு)

எங்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத் துவம் கொடுத்து ஜனாதிபதி உட்பட்ட சம் பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு எங்கள் அனைவரையும் பொதுமன்னிப்பு அல்லது பிணையிலாவது விடுதலை செய்து எமது வாழ்வில் விளக்கேற்ற பரிந்துரை செய்யுங்கள் இவ்வாறு மகஸின் தமிழ் கைதிகள் அனைத்து பௌத்த பீடாதி பதிகளிடமும் கடிதம் மூலம் கோரியுள்ள னர்.

இந்தக் கடிதங்கள் ,சிறைச்சாலை ஆணை யாளர் ,சிறைச்சாலை தலைமைக் காரியா லயம் கொழும்பு ஊடாக மல்வத்த பீடாதிபதி , அஸ்கிரிய பீடாதிபதி ,சியம்ப பீடாதிபதி, ஆகி யோருக்கு மூலப்பிரதிகள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதுடன் ஜனாதிபதி, பிரதம மந்திரி, நீதியமைச்சு, பிரதம நீதியரசர், சிறைச்சா லைகள் அமைச்சர் ஆகியோருக்கு இணைப் பிரதிகளும் அனுப்பப்பட்டுள்ளன. (6)

## 30.07.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்



1502 - கிறிஸ்தோபர் கொலம்பஸ் தனது நான்காவது கடற்பயணத் தின் போது கொந்துராசை அடைந்தார்.

1629 - இத்தாலியில் நேப்பிள்சில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 10,000 பேர் கொல்லப்பட்டனர்.

1733 - ஐக்கிய அமெரிக்காவில் முதலாவது விடுதலைக் கட்டுநர் லாட்ஜ் ஆரம்பிக்கப்பட்டது.

1756 - ரஷ்யாவின் அரசி எலிசபெத்தின் வேண்டுதலுக்கிணங்க கட்டிடக் கலைஞர் பார்த்தலோமியோ ராஸ்ட்ரெல்லி கத்த ரீன் அரண்மனையைக் கட்டி முடித்தார்.

1825 - ப்சிபிக் கடலில் மால்டன் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.

1932 - கலிபோர்னியாவில் 10வது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆரம்பமாயின.

1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல் 1-58அமெரிக்காவின் கடற்படைக் கப்பலை மூழ்கடித்த தில் 883 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

1954 - எல்விஸ் பிறீஸ்லி முதற்தடவையாக பொது மேடையில் பாட ஆரம்பித்தார்.

1966 - உதைபந்தாட்ட உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் இங்கி லாந்து அணி மேற்கு ஜெர்மனியை 4-2 என்ற கணக்கில் வென்றது.

1971 - அப்பல்லோ 15 இல் சென்ற டேவிட் ஸ்கொட் மற்றும் ஜேம்ஸ் ஏர்வின் இருவரும் லூனார் ரோவர் வாகனத்துடன் சந்திரனில் இறங்கினர்.

1971 - ஜப்பானில் இரண்டு விமானங்கள் வானில் மோதிக் கொண் டதில் 162 பேர் கொல்லப்பட்டனர்.

1980 - பிரான்ஸ், மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றிடம் இருந்து வனுவாட்டு விடுதலை பெற்றது.

1997 - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் "திரெட் போ" என்ற இடம்பெற்ற மண்சரிவில் 18 பேர் கொல்லப் பட்டனர்.

## பிறப்புகள்

1818 - எமிலி புரொண்டி, ஆங்கில நாவலாசிரியர் (இ. 1848)

1863 - ஹென்றி ஃபோர்ட், அமெரிக்கத் தொழிலதிபர் (இ.1947)

1947 - ஆர்னோல்ட் ஸ்வார்செனேகர், நடிகர், அரசியல்வாதி

## இறப்புகள்

1969 - இ.சி. இரகுநாதையர் (இலங்கையில் வாக்கிய பஞ்சாங்கம் கணித்து வெளியிட்டவர்).

**1930 - முதலாவது உதைபந்தாட்ட உலகக்கிண்ணப்போட்டி இறுதி ஆட்டத்தில் உருகுவே ஆர்ஜெண்டீனாவை 4-2 கணக்கில் தோற்கடித்து உலகக்கிண்ணத்தை வென்றது**



# வேண்டாம் அரசியல்... வேண்டும் நிம்மதி!

# அண்ணா சமாதியில் கலங்கிய கருணாநிதி!

**"கடற்கரையில் காற்று வாங்கியது போதும் அண்ணா!**
**எழுந்து வா எங்கள் அண்ணா!**
**வர மாட்டாய்! வர மாட்டாய்!**
**இயற்கையின் சதி எமக்குத் தெரியும் அண்ணா!**
**நீ இருக்கும் இடம் தேடி நான் வரும் வரையில்....**
**இரவலாக உன் இதயத்தை தந்திடு அண்ணா!**
**நான் வரும்போது கையோடு கொண்டு வந்து அதை**
**உன் கால்மலரில் வைப்பேன் வைப்பேன் அண்ணா!"**

41ஆண்டுகள் கடந்த பிறகும், இன்று படித்தாலும் விழியோரம் நீர் உருகவைக்கும் இந்த வரிகளை எழுதியவர் முதல்வர் கருணாநிதி.

கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7.45 மணிக்கு புதிய சட்டமன்ற வளாகத்தில் இருந்து கிளம்பிய கருணாநிதியின் கார் திடீரென சென்னை மெரினா


அண்ணா நினைவிடம்...

கடற்கரையோரம் இருக்கும் அண்ணா நினைவகத்துககுச் சென்றது. எவ்வித முன்னேற்பாடும் செய்யப்படாத அந்த நினைவிடத்தல் அரை மணி நேரத்துக்கும் மேலாக அமர்ந்திருந்து திரும்பி இருக்கிறார். யாரிடமும் சொல்லாமல் அண்ணா நினைவிடத்துக்கு முதல்வர் திடீர் விசிட் அடித்தது ஏன்? அங்கிருந்தபோது அவர் பகிர்ந்துகெண்ட விஷயங்கள் என்ன? முதல்வருடன் உடனிருந்து உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடியை சந்தித்துக் கேட்டோம்.

"முதல்வர் எப்போதும் போல் அன்றைக்கும் கலகலப்பாகத்தான் இருந்தார். புதிய சட்டமன்றக் கட்டடத்தில் அவர் பேசிக்கொண்டு இருந்தபோது, அந்த இடத்தில் பூச்சிகள்வட்டமிட்டபடி இருந்தன. அதனால் அங்கிருந்து கிளம்பிய முதல்வர் காருக்குப் போனார். வீட்டுக்குத்தான் போகப்போகிறார் என நாங்கள் நினைக்க... அவரோ காரை மெரினாவுக்கு விடச் சொன்னார். எதற்காக என்று எங்களுக்குத் தெரியவில்லை. அப்போது நான், அமைச்சர் ஆற்காடு வீராசாமி, பொதுப்பணித்துறை செயலாளர் ஆகிய மூவர் மட்டும்தான் அவரோடு போனோம். "வந்து ரொம்ப நாளாச்சுய்யா" என்றபடி அண்ணா சமாதியை நோக்கி வண்டியைத் திருப்பச் சொன்னார். அவர் வரப்போகும் விஷயம் யாருக்கும் சொல்லப்படாததால்

பெரிதாக கூட்டம் ஏதும் இல்லை. கடலோரக் காற்று சிலுசிலுவென வீச, முதல்வர் முகத்தில் ஏக உற்சாகம். அண்ணா சமாதிக்கு அருகில் அமர்ந்த முதல்வர் அண்ணா குறித்த பல விஷயங்களையும் ஆர்வத்தோடு பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார்.

"இந்த இடத்தில் அண்ணாவுக்கு நினைவிடம் கட்டியது ஏன் எனத் தெரியுமா?" எனக் கேட்டார். நாங்கள் ஆர்வத்தோடு தலைவரின் முகத்தைப் பார்த்தோம். "ஆரம்ப காலத்தில் எங்களுடைய மீட்டிங் ஸ்பாட்டே இந்த இடம்தான். அண்ணா, ராம, அரங்கண்ணல் ஆகியோர் இங்கே வந்துவிட்டால் மணிக்கணக்கில் பேச்சு நீளும். அப்போது இந்த இடத்தில் சிறு மேடைபோன்ற இடம் இருக்கும். அதற்கு அருகே ஸ்தூபி ஒன்று இருக்கும். அரசியல் தொடங்கி குடும்பம் வரையிலான ஆயிரமாயிரம் விஷயங்களை அண்ணாவும் நானும் இந்த இடத்தில்தான் பகிர்ந்து இருக்கிறோம். இதர தோழர்களும் எங்களோடு நிறைய விவாதங்களைச் செய்வதும் இந்த இடத்தில்தான்!"எனத் தலைவர் சொன்ன போது, "அந்தச் சிறு இடம்தான் இத்தகைய சீரிய இயக்கத்தின் செம்மைத் தளமாக இருந்ததா?" என ஆச்சரியமாகப் பார்த்தோம்.


கருணாநிதியுடன் பொன்முடி...

அடுத்து தலைவர் சொன்னதுதான் இதுவரை எங்களுக்குத் தெரியாதது. அண்ணா புற்றுநோய் சிகிச்சைக்காக அமெரிக்கா போவதற்கு முதல் நாள் இரவு இந்த இடத்தில்தான் கலைஞரோடு நெடுநேரம் பேசிக்கொண்டு இருந்தாராம். கட்சி வளர்ச்சி குறித்த பல விஷயங்களை அந்த நேரத்தில் அண்ணா கலைஞருடன் பகிர்ந்து கொண்டாராம். அந்த நினைவை நெஞ்சத்தில் பதியமிட்டுத்தான் அந்த இடத்திலேயே அண்ணாவுக்கு தலைவர் நினைவு இடம் கட்டினாராம்.

எப்போதுமே அண்ணாவின் நினைவுகளை அடிக்கடி பகிர்ந்து கொள்வது தலைவரின் வழக்கம். ஆனால், அன்றைக்கு அவர் முகத்தில் தெரிந்த உற்சாகம் பெரிதாக இருந்தது.
மிகுந்த நிம்மதியோடு அரை மணி நேரத்திற்கும் மேலாக அண்ணா குறித்து பேசிக்கொண்டு இருந்தார்.

## கலைஞர் கருணாநிதிக்கு மனக் கவலையா?

அண்ணா காலத்திலும் எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோதும் பல நேரங்களில் கடலோரக் காற்றில் லயித்தபடி தலைவர் கழகத் தோழர்களோடு பேசி மகிழ்வதுண்டு. கடலும் கடல் சார்ந்த இடமும் தலைவருக்கு அந்தளவுக்கு இஷ்டம். பொதுமக்களின் இடையூறு ஏதும் இல்லாததால், அன்றைக்கு அதேபோன்ற மகிழ்ச்சியோடு அண்ணாவின் நினைவிடத்தில் முதல்வர் அனுபவித்தார்.

**ஜூனியர் விகடன்**

அரசு அதிகாரி ஒருவர் முதல்வரின் அருகில் வந்தார். "இந்த அரசியல், அதிகாரம், நிர்வாகம் இதெல்லாம் இந்த இடத்துல வேண்டாம்... நான் நிம்மதியா கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கத்தான் இங்கு வந்தேன்" என்று அவரைப் பார்த்து தலைவர் சொன்னார். "நிம்மதியா ஒரு மணிநேரம் உட்கார்ந்திருக்கலாம்யா" என்று மறுபடியும் சொல்லிக் கொண்டார். இதனால் நாங்கள் அரசியலைப் பற்றி ஏதும் பேசாமல், தலைவர் சொன்ன நினைவு மீட்டல்களில் லயித்தபடி இருந்தோம்.அதற்குள் அண்ணா நினைவிடத்தில் தலைவர் அமர்ந்து இருக்கும் விஷயம் காற்றுவாக்கில் பரவ, மக்கள் கூட்டம் கூடிவிட்டது.

லேசாகிப்போன மன நிறைவோடு அங்கிருந்து கிளம்பிய தலைவர் மக்களைப் பார்த்து கை அசைத்தபடி தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டார்." என முதல்வர் உடனான நெகிழ்வை கடகடத்த பொன்முடியிடம், "முதல்வர் ஏதோ மன வருத்தத்தால்தான் அண்ணா நினைவிடத்துக்கு சென்றதாக பெரிதாக பேச்சுக் கிளம்பிவிட்டதே?" எனக் கேட்டோம்.

பலமாகச் சிரித்த பொன்முடி, "அவருக்கு எந்த வருத்தமும் கிடையாது. மிகுந்த உற்சாகத்தோடு அவர் பகிர்ந்துகொண்ட விஷயங்கள்தான் இவை. அண்ணா நினைவிடத்தில் அவர் இருந்தபோது எந்தளவுக்கு மகிழ்ச்சியும் மன நிறைவுமாக இருந்தார் என்பது அவர் அருகில் இருந்த எங்களுக்குத்தான் தெரியும். விஷயம் தெரியாத சிலர்தான் முதல்வருக்கு மன வருத்தம் என தவறான தகவல்களைப் பரப்பிவிட்டார்கள். அண்ணாவின் அத்தனைக் கனவுகளையும் நிறைவேற்றும் வெற்றித் தலைவராக இருக்கும் முதல்வர் எதற்காக வருத்தப்பட வேண்டும்? அண்ணா என்கிற வார்த்தையே அவரை அளவில்லாத ஆனந்தத்தில் ஆழ்த்திவிடுமே...!" என்றார் சிலிர்ப்போடு.

# தமிழரைக் கொன்ற இலங்கைக்கா போகப் போகிறார் கருணாஸ்

## நடிகர் சங்கக் கூட்டத்தில் சத்தியராஜ் ஆவேசம்



கருணாஸ்

அசின் சமீபத்தில் இலங்கைக்குப் போன விவகாரமே தகித்துக் கொண்டிருக்கும் நிலையில் ... நடிகர் கருணாஸ், "நேர்த்திக் கடனுக்காக இலங்கைக்குப் போவேன்!" என சொல்ல... கோலிவுட் வட்டாரமே சூடாகி இருக்கிறது. இந்தச் சூழலில் கடந்த 25ஆம் திகதி நடிகர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் அனலோ அனல்!

"அசின் கேரளத்துப் பெண், தமிழர்களின் உணர்வுகளை மதிக்கவில்லை. அவர் இந்திப் படத்துக்காக இலங்கை போனாலும், இங்குள்ள நடிகர் சங்கத்திடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

ஆகவே, இனி தமிழ்ப் படங்களில் அசினை ஒப்பந்தம் செய்யக்கூடாது..." என்று நடிகர் சங்கப் பொதுச் செயலாளர் ராதாரவி ஆவேசப்பட்டார். அடுத்துப் பேசிய தலைவர் சரத்குமாரோ, "நடிகர்களுக்குத் தடை போடுவது எல்லாம் கூடாது. இது குறித்து, தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் சங்கங்களுடன் கலந்து பேசி ஒரு முடிவெடுப்போம்..." என்று சூட்டைத் தணித்தார்.



இவர்கள் இருவருக்கும் இடையில் பேசிய சத்யராஜ்தான் ஹைற-லைட்! "நாம் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், தொலைபேசியில் கருணாஸை மிரட்டியதாகச் சொல்கிறார்கள். ஆனால், அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், ரொம்ப நல்லவர்கள். தமிழ் உணர்வாளர்கள், தமிழீழம் பெறுவது ஒன்றையே தாகமாகக் கொண்டவர்கள். பலர் தங்கள் உணர்வுகளை மென்மையாக வெளிப்படுத்துவார்கள். சிலர் கோபத்துடன் வெளிப்படுத்துவார்கள். அப்படிக் கோபப்பட்ட சிலர்தான் கருணாஸை மிரட்டியதாகச் சொல்கிறார்கள். "குடும்ப விடயமாக இலங்கையில் உள்ள கோயிலுக்கு வேண்டுதலுக்காகப் போகவேண்டும்'' என்கிறார் கருணாஸ்.

நான் நாத்திகவாதி, அதுபற்றிக் கருத்துக் கூறமுடியாது. ஆனால், ஒன்றை கருணாஸிக்குத் தெரிவித்துக் கொள்வேன்.... நிச்சயம் ஒருநாள் இலங்கையில் தமிழீழம் மலரும். அப்போது தமிழனுக்குச் சொந்தமான மண்ணில், புதுசாக ஒரு கோயில் கட்டுவார்கள். அந்தக் கோயிலில் கருணாஸ் தனது வேண்டுதலை நிறைவேற்றிக் கொள்ளட்டும். அதுமட்டுமல்ல... இதுவரை சாமியே கும்பிடாத இந்த சத்யராஜ், அந்தப் புதுக் கோயிலுக்குப் போய் சாமி கும்பிடுவான். அதுவரை கருணாஸ் தயவுசெய்து போகவேண்டாம் என்று அவரைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தமிழர்களைக் கொன்று குவித்த கொலைகார இலங்கைக்கு வரச்சொல்லி, எனக்கு 10 கோடி ரூபாய் கொடுத்தாலும் போகமாட்டேன்...! இலங்கைக்குப்போய் சம்பாதித்துத்தான் சோறு தின்ன வேண்டும் என்கிற நிலை வந்தால், பட்டினி கிடந்தே சாகத் தயாராக இருப்பேன்!'' என்று குமுறித் தள்ளினார்.



கூட்டத்தில் மனோரமா, சத்யராஜ்...

## நான் நாத்திகன்; தமிழீழம் கிடைத்தால் அப்போது முருகனை வணங்குவேன்;

முன் வரிசையில் அமர்ந்து இதை எல்லாம் கேட்ட கருணாஸ் நம்மிடம், "நான் புதுக்கோட்டையில் பிறந்த வன். ஈழம்தான் என் பூர்வீக பூமி. தமிழீழம் பெறவேண்டும் என்கிற வெறி, சீமானைவிட எனக்கு அதிகம் உண்டு. நான், இயல்பாகவே முருக பக்தன். "தமிழ்நாட்டில் அறுபடை வீடுகள் உண்டே..... அதில் ஏதாவது ஒரு கோயிலுக்குப் போகலாமே..." என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், அதெல்லாம் குலதெய்வத்தை வழிபடுவது போல் ஆகுமா? என் குலதெய்வமான முருகன் கோயில், கதிர்காமத்தில் தானே இருக்கிறது? அங்கே நான் நேர்த்திக்கடன் செலுத்துவது தப்பா?

முதலில் வர்மா என்ற ஒருவர் செல்போனில் தன்னை, "சீமான் உதவியாளர்'' என்று சொல்லிக் கொண்டு, "இலங்கைக்கு நீ போகக் கூடாது. போனால், தொலைத்து விடுவோம்...'' என்றார். அடுத்து, "நாம் தமிழர்" இயக்கத்தைச் சேர்ந்த அதியமான் ரொம்பவும் மோசமாக மிரட்டினார். அதோடு மட்டுமில்லாமல் தொடர்ந்து பலர், "நீ சிங்களவனுக்குப் பிறந்தவனா?'' என்று கொச்சை கொச்சையாக எஸ்.எம்.எஸ். அனுப்பினார்கள்.

இதையெல்லாம் அப்படியே கமிஷனர் ஆபீஸில் புகாராகக் கொடுத்தேன். நான் சிங்களவனிடம் பணம் வாங்கிக்கொண்டு இலங்கை செல்வதாக அவதூறு பரப்புகிறார்கள். பணத்துக்கு ஆசைப்படுகிறவனா நான்? உச்சத்தில் இருக்கும் விஜய், சூர்யா எல்லாம் இரண்டு பசங்களை இன்ஜினியருக்குப் படிக்க வைக்கிறார்கள் என்றெல்லாம் பேசுகிறார்களே... சின்ன நடிகனான நானே மெரிட் அடிப்படையில் மார்க் எடுத்தும் கஷ்டப்படுகிற 25 மாணவர்களை இன்ஜினியருக்குப் படிக்க வைக்கிறேன். என் பணக்கார நண்பர்களிடமும் ஏழை மாணவர்களுக்குப் படிக்க உதவச் சொல்லி வருகிறேன். இதை எல்லாம் என்றைக்காவது வெளிச்சம் போட்டுக் காட்டி இருக்கிறேனா...?

**ஜூனியர் விகடன்**

அது போகட்டும், முதலில் இந்த விடயத்தில் என்ன உண்மை என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். இலங்கையில் ஒரு தமிழ் எஃப்.எம். இருக்கிறது. அது 24 மணிநேரமும் தமிழிலேயே ஒலிப்பது. அங்கே 300-க்கும் மேற்பட்டவர்கள் வேலை பார்க்கிறார்கள். அதில் 250 பேர் ஈழத்தமிழர்கள். அந்த நிறுவனத்தை இந்தியாவில் இருக்கும் பஞ்சாபி ஒருவர் நடத்துகிறார். அந்த ரேடியோ தொடங்கி 12 வருடங்கள் ஆகின்றன. அதற்காக இலங்கைக்கு வரும் என்னையும் கலந்துகொள்ளச் சொல்லி அழைத்தார்கள். "நான் வரமாட்டேன். கொழும்பில் தங்கி அங்கிருந்து கதிர்காமம் செல்கிறேன். வேண்டுமானால், கொழும்பில் இருக்கும் போது என் அறைக்கு வாருங்கள்...! என்றுதான் சொன்னேன். ஆனால், நான் என்னவோ அந்த நிகழ்ச்சிக்குத்தான் செல்வது மாதிரி தவறாகத் திரித்து விட்டார்கள்" என்றார் கருணாஸ் ஆதங்கத்தோடு.

# வள்ளலாரின் சமுதாயச் சிந்தனைகள்

இந்திய நாடு பழம்பெருமையும் புதுமைச் சிறப்பும் பெற்றுத் திகழும் நாடு. இத்தகு நாட்டின் மக்களை எண்ணிப் பார்த்துத் தமிழ்நாட்டில் ''சிதம்பரம் இராமலிங்கம், வடலூர் வள்ளலார்'' வள்ளலார் திரு அருட்பிரகாச வள்ளலார் என்றெல்லாம் அழைக்கப்பெறும் இராமலிங்க அடிகள் தோன்றிச் செய்த சமுதாய விழிப்புணர்ச்சியை எண்ணிப் பார்ப்பது இக்கட்டுரையின் நோக்கம்.




*சன்மார்க்க அறநெறி:*

மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழகத்தில் சன்மார்க்க மரபு வளர்ந்து வருகின்றது. சன்மார்க்கத்தின் அடிப்படைக்கொள்கைகள் மனிதன் வாழுகின்ற சமுதாயத்தை நினைத்துப் பார்ப்பது மன்னுயிர்க்கு இரங்குதல்,, பசிபோக்குதல், உயிர்க்கொலை தவிர்த்தல், ஆருயிர்க்கும் அன்புசெய்தல், மனிதச் சமத்துவம் காணுதல் எனலாம். சன்மார்க்க நெறியினைத் திட்டமிட்டு மன்னர்களும் மக்கள் கூட்டமும் முறையாக வளர்த்தமையைச் சங்க இலக்கியங்களும் சுட்டுகின்றன. மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் சன்மார்க்கத்தின் வழி தம் காலத்தில் முதற்கட்டமாகப் பசி தீர்க்கும் பேரறத்தை இவ்வுலகத்தில் நிலைநாட்டி அதன் வழியாகச் சமுதாயத்தை உயர்த்த எண்ணிய வள்ளலார் தம்மைச் சுவாமிகள் என அழைப்பதோ, வணங்குவதோ தமக்கு உடன்பாடல்ல என்பதைப் பல இடங்களில் உணர்த்துவார்.

அன்றைய தென்னார்க்காடு இன்றைய வள்ளலார் மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமமான மருதூரில் 1823 ஒக்டோபர் 5 இல் தோன்றினார். தாம் பிறந்த காரணத்தைத் திருஅருட்பாவில் பின்வருமாறு கூறுவார்.

"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரும் சகத்தே திருத்திச் சன்மார்க்கச் சங்கத் தடைவித்திடவும்'' மேலைநாடுகளிலிருந்தோ வேறு வேறு புலங்களிலிருந்தோ இறக்குமதியான எவற்றிக்கும் அடிமையாகாது, ''உயிர் இரக்கம், மனித நேயம், மனிதவள மேம்பாடு'' என்பதை மட்டும் தமது சிந்தனைக்கும் எழுத்துக்கும் மேல்வரிச் சட்டமாக அடிநாதமாக இலக்காக வைத்துக்கொண்டு வள்ளல் பெருமான் வாழ்ந்தார்.

இதற்காகவே பாடல்கள் ஆறாயிரம், உபதேச உரைகள், திருமுகங்கள், உரை நடைகள் உருவாக்கினார். அவர் நல்ல நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், இதழாசிரியர், போதகாசிரியர் ஆவார்.

**அன்றைய நாட்டுநிலை:**

வள்ளலார் வாழ்ந்த காலத்தில் ஐரோப்பிய, ஆங்கில நாகரிகம் இந்தியாவைப் பெருமளவில் தாக்கியிருந்தது. மக்களின் அறியாமை,வறுமை இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு மதமாற்றம் சர்வ சாதாரணமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதனை முழுமையாக உணர்ந்ததால் தான் ''வாயிலீரென இருக்கின்றீர் அல்லால் வாய் திறந்தொரு வார்த்தையும் சொல்லீர்'' எனத் திருஅருட்பா பாடினார்.

''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில்யான் 'ஒருவன்'' என்பதை ஏற்றுக் கொண்டாலும் சமுதாய மாற்றம் தேவை

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

என்பதற்கு ஓங்கித் தனிக்குரல், தமிழ்க்குரல், மனிதக்குரல் கொடுத்தார் அவர்.

அவரது காலத்தில் இந்தியாவின் வடக்கு ஊனையும் உயிரையும் உருக்கக் கூடிய கொடிய பஞ்சத்தை அனுபவித்ததன் வேர் தமிழகத்திலும் பரவியதைக் கண்டார். வெறும் சோற்றுக்கு மக்கள் பட்டபாட்டினைக் கண்டு, "நெருப்பிலே உருக்கும் நெய்போல" வருந்தி, "கஞ்சியாதிகளைப்பெற" மக்கள்நாள்முழுவதும் அலைந்து "சிறிதும் உண்டிலேம்" என வாய்விட்டு அற்றிவாழ்ந்ததைக்கண்டு வருந்தினார்.

அப்பார்வையின் உருவாகத்தான் வடலூரில் 1867 இல் "சத்திய தருமச்சாலை" எனப்பெயர் பெற்ற ''அறக்கூழ்ச்சாலை" தோற்றுவிக்கச் செய்தது. வள்ளலாரின் சமுதாய சிந்தனையில் தட்டிய முதற்பொறி பசிப்பிணி போக்குவதுதான்.

வடலூரில் அமைத்த சத்தியதருமச்சாலையில் சோறிடுவதால் உலகம் முழுமைக்கான பசிக்கொடுமை நீங்கிவிடுமென வள்ளலார் கருதவில்லை. இல்லந்தோறும் சத்திய தருமச்சாலைகள் தோன்றிப் பசியே இல்லாத ஒரு புதிய சன்மார்க்கச் சமுதாயம் அமைய வேண்டுமென்பதே அவரது பெரு விருப்பு.

**அன்புப்புரட்சி:**

'அவர், காலத்திய தேவை அன்பு தான் என்பதைப் பல வரிகளால் காட்டுவார்.

''அன்பெனும் பிடியன் அகப்படும் மலையே அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே அன்பெனும் உயிர்ஒளி அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே அன்புரரு வாம்பர சிவமே''

எனும் பாடல் வழி அன்பெனும் இறைத் தத்துவத்திற்குள் மனிதக் கூட்டமே அடக்கம் என்பதைத் தெளிவாக காட்டுவார்.

*சாதி சமய வேற்றுமை:*

உயிர் வருத்தம் நீங்கி மனிதகுலம் ஒன்றுபட வேண்டும். சாதி, குலம், சமயம், மதம், சாத்திரம், கோத்திரம், ஆசாரம் இவை அனைத்தும் மனித சிந்தனைக்கும் செயற் பாட்டுக்கும் தடையாக உள்ளன. சாதிபேத மற்ற சன்மார்க்கச் சமுதாயம் படைப்பதில் கருத்துக்களைச் சொல்லவும் செயல்படவும் தமக்குப் பின் வழித் தோன்றல்கள் பல உருவாகுவது போல எழுதினார்.

"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா நவின்றகலைச் சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டு'' என்றும் சாதியும் மதமும் சமயமும் பொய் என்றும் சாதி சமயவிகற்பங்களெல்லாம் தவிர்த்தே எவ்வுலகும் சன்மார்க்கம் பொதுவடைதல் வேண்டும்''. என்றும் கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக என்றும் பல நிலைகளில் தமது விருப்பத்தை வெளிப்படையாகக் கூறுவார்.

சாதி, சமய மதங்கடந்த மனித ஒருமைப்பாட்டுப்பேரன்பு உலகமுழுமைக்கும்வெளிப்பட வேண்டும். ''கல்லார்க்கும் கற்றவர்க்கும் வல்லார்க்கும் மாட்டார்கள் எல்லாருக்கும் பொதுவான ஒரு சமுதாயம் எம்மதமோ எக்குலமோ'' என்ற சிந்தனைக்கு இடமில்லாத ''எப்பொருளும் எவ்வுயிரும், எவ்வுலகும் ஒன்றே'' என்ற ஒப்பற்ற சமு தாயம் உருவாக வேண்டும்.

*சமனிலைச் சமுதாயம்*

நிலத்தை விளைவிப்பவர் ஒருவராகவும் அதன் பலனை அனுபவிப்பவர் மற்றவராகவும் உள்ள நிலை மாறி நிலத்தை விளைத்தவனே அறுவடை செய்து பலனையும் அனுபவிக்கக் கூடியவனாக ஆகக் கூடிய சமுதாயம் பற்றி வள்ளலார் சிந்திக்கின்றார். ஒரு மாபெரும் மறுமலர்ச்சி உரிமை இயக்கமே இதனால் மலர்ந்தது எனலாம்.

''எளியவர் விளைத்த நிலமெலாம் கவரும் எண்ணமே பெரிதுளேன் புன்செய்க்களியுறும் மனையில்சர்க்கரை கலந்து காய்ச்சிப் பால் கேட்டுண்ட கடையேன் தனியவர்க்குதவேன் விருப்பிலான் போலச் சுவைபெறச் சுவைத்தநாக் குடையேன்'' என்ற வரிகள் வள்ளலாரின்சமனிலைச்சமுதாய உணர்வுக்குச் சான்றாக அமைகின்றன.

பொருள் ஒரு ஸ்டத்தில் தேங்கிக் கிடக்கக் கூடாது. முடக்கவும் கூடாது. ஏதாவது காரணங் காட்டிக் கவர்ந்து கொள்ளவும் கூடாது. தான் உழைக்காது அடுத்தவர் உழைத்துச் சேர்த்து வைத்திருக்கக்கூடிய பொருளின் மீது எக்காரணங்கொண்டும் இச்சை வைக்கக் கூடாது எனவும் வள்ளலார் பெருமான் வலியுறுத்துகிறார்.

பேராசிரியர்
டாக்டர் சு.சிவகாமசுந்தரி

"கூட்டமே அறியேன் அடுத்தவர் இடத்தே காசிலே ஆசையில்லாதவன் போல் பாட்டமே காட்டிப் பணம்பறித்துழன்றேன் பகலெலாம் தவசிபோல் இருந்தேன்.

தன்னுழைப்பை நம்பாமல் அடுத்தவர்களைச் சுரண்டித்தான் வாழவேண்டும் என்கிற அளவுக்குத் தமிழக வளம் குறைந்து விடவில்லை.

இடத்தவர்கள் வருத்தாது பன்னாடுகளில் கடன் பெறாது பொருளைப் பெருக்கிக் கொள்ளத்தக்க வளம் தமிழ்நாட்டில் நிறைய உண்டு என்பதை வள்ளலார் பெருமான் வகுத்துக் காட்டுவார்.

(தொடரும்)

# 15 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

15 இலங்கை மீனவர்களையும் அவர்களது மூன்று மீன்பிடி வள்ளங்களையும் இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இந்தியக் கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளையில் குறித்த இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் கன்யாகுமரிக்கு தென் கிழக்குப் பகுதியில் குறித்த மூன்று படகுகளும் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

குழுதுமாலி,ராமானி மற்றும் பொம்பிகுமார் ஆகிய மீன்பிடிப் படகுகளே இவ்வாறு இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைப் பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தமிழக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# சர்வகட்சி பேரவையின் அறிக்கை வெளிநாட்டு தூதரகங்களுக்கு கையளிப்பு

(கொழும்பு)

சர்வகட்சிப் பேரவையின் இறுதி அறிக்கை வெளிநாட்டு தூதுவராலயங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும்;ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரசும் கூட்டாக இணைந்து இந்த அறிக்கையை வெளிநாட்டு தூதரகங்களிடம் ஒப்படைத்துள்ளன.

சர்வகட்சிப் பேரவையின் நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உலக நாடுகளுக்கு அம்பலப்படுத்தும் நோக்கில் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜனினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே , பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற தூதரகங்களிடம் இந்த அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சிப் பேரவை என்று ஒன்றை உருவாக்கி,அதன் மூலம் சர்வதேச சமூகத்தை அரசாங்கம் ஏமாற்றியுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி கடந்த வாரம் குற்றம் சுமத்தி யிருந்ததுடன் சர்வ கட்சிப் பேரவையின் பரிந்துரைகள் இதுவரையில் நடைமுறைப் படுத்தப் படவில்லை என சுட்டிக்காட்டியிருந்தது.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 2006ஆம் ஆண்டுசர்வகட்சிப்பேரவை நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# பாசிக்குடா பகுதிகளில் சுற்றுலா விடுதிகள் அமைப்பு

(கொழும்பு)

கற்பிட்டி பாசிக்குடா பகுதிகளில் சுற்றுலாத்துறை விடுதிகளை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.


அதன்படி பாசிக்குடா பகுதியில் 13 சுற்றுலாத்துறை விடுதிகளை அமைக்க சுற்றுலாத்துறை அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆயிரத்து 200 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் விடுதிகள் மூலம் நேரடியாக இரண்டாயிரம் பேருக்கும் மாற்று வழிகளில் மூவாயிரம் பேருக்கும் தொழில் வாய்ப்புக் கிட்டும் என அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 7 விடுதிகளின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை ஒன்றரை வருட காலத்தில் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. (6)

# இணையத்தளம் அம்பலப்படுத்திய இரகசிய புலனாய்வு தகவல்கள் புதியவை அல்ல

## ஒபாமா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

விக்கிலீக்ஸ் இணையதளம் அம்பலப்படுத்திய புலனாய்வு இரகசிய தகவல்களில் புதிய விடயங்கள் ஏதும் இல்லை. அதில் உள்ள பல விடயங்கள் ஏற்கனவே விவாதிக்கப்பட்டு விட்டன என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தெரிவித்தார். ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திவரும் போர் தொடர்பாக போர்க்களத்திலிருந்து திரட்டப்பட்ட புலனாய்வு இரகசிய தகவல்கள் விக்கிலீக்ஸ் என்கிற இணையத்தளம் வெளியிட்டது. இது பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ அமைப்பு அல்கொய்தா தீவிரவாதிகளுடனும் தலிபான்களுடனும் நெருங்கிய உறவு வைத்து அவர்களுக்கு உதவுவதாகவும் புலனாய்வு இரகசிய குறிப்புகளில் உள்ளது. இந்த இரகசிய குறிப்புகளை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியது.

ஆப்கானிஸ்தான் போர்க்கள இரகசிய தகவல்கள் அம்பலமாகவே ஆப்கான் விவகாரம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. அமெரிக்காவின் இரட்டை கோபுரம் மீது 2001 செப்டம்பர் 11 ஆம் திகதி அல்கொய்தா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களும் சரி அமெரிக்கா மீதும் அதன் தோழமை நாடுகள் மீதும் நடந்த இதர தாக்குதல்களும் சரி ஆப்கானிஸ்தானில் தான் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது.

இதை அறிந்த அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளை அடியோடு ஒழிக்க தனி கொள்கையை வகுத்தது. இதற்காக பாகிஸ்தானையும் துணைக்குச் சேர்த்துக் கொண்டது. விக்கிலீக்ஸ் இணையதளம் இரகசிய புலனாய்வு தகவல்களை அம்பலப்படுத்திய பிறகு முதல் முறையாக நாடாளுமன்ற அவைத்தலைவர்களை சந்தித்து ஒபாமா ஆலோசனை நடத்தினார்.

அதன் பின்னர் நிருபர்களிடம் ஒபாமா கருத்து தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கப் படைகளுக்கு தேவையான வசதிகள் செய்து தர போதிய நிதியுதவி வழங்க செனட் அவை ஒப்புக்கொண்டது போல் பிரதிநிதிகள் அவையும் சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் அம்பலப்படுத்திய தகவல்களில் எதுவுமே புதியவை அல்ல. அதில் உள்ள விடயங்கள் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டவைதான். ஆப்கானிஸ்தானில் செயல்படும் தீவிரவாத அமைப்புகளை ஒடுக்க அமெரிக்கா புதிய யுக்தியை வகுத்து செயல்பட்டு வருகிறது.

இது வெற்றி கரமாக அமைய முழுந்த எல்லாவழிகளும் கையாளப்படுகிறது. போர்க்களத்தில் திரட்டப்பட்ட இரகசிய புலனாய்வு தகவல்கள் அம்பலமானது கவலை அளிக்கிறது. இரகசிய தகவல்கள் அம்பலமாவது போர்க்களத்தில் உள்ள படையினருக்கு நல்லதல்ல. அது ஆபத்தை விளைவிக்கும். மேலும் போர் நடவடிக்கைகளுக்கும் அது குந்தகம் ஏற்படுத்திவிடக்கூடும் என்பதே எனது முக்கிய கவலை என்று நிருபர்களிடம் தெரிவித்தார் ஒபாமா. (6)

## சீன தொழிற்சாலையில் வெடிப்புச் சம்பவம்

### 10 பேர் பலி; 120 பேர் காயம்


சீனாவில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதுடன் 120 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

சீனாவின் கிழக்குப் பகுதியிலுள்ள பிளாஸ்ரிக் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலையொன்றிலேயே நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாக சீன நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொழிற்சாலையிலுள்ள இயந்திரம் இயங்கத் தொடங்கியபோது அதில் ஏற்பட்ட வாயுக் கசிவே இந்த வெடிப்புச் சம்பவத்திற்கு காரணம் என்று குறித்த தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்தது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் 14 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் சீன நாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. (6)

# விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டுபிடிப்பு



பாகிஸ்தானில் நேற்று முன்தினம் மலையில் விமானம் மோதி நொறுங்கியதில் 152 பயணிகள் பலியானார்கள். விமானம் சிதறி கிடக்கும் இடத்தில் நேற்று 28 ஆவது நாளா கவும் மீட்பு பணிகள் நடைபெற்றன.

மழை பெய்வதாலும் விமானம் கிடக்கும் இடத்தில் நிலச்சரிவு ஏற்பட்டு இருப்பதாலும் மீட்பு பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆனாலும் 90 சதவீத மீட்பு பணிகள் முழுந்து விட்டதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்து உள்ளது.

பலியான பல பேரின் உடல்கள் அடையாளம் தெரியாத வகையில் ஆங்காங்கே சிதறி கிடந்தன. பலருடைய உடல்கள் தீயில் கருகி இருந்தன. பெரும் பாலான உடல்கள் மீட்கப்பட்டு விட் டன. இன்னும் சில உடல்கள் விமானம் சிதை ந்த பாகங்களுக்கு அடியில் கிடக்கின் றன. அவற்றை மீட்கும் பணி நடந்து வருகிறது.

ஒவ்வொரு உடலையும் தனித்தனி பைகளில் போட்டு கட்டி கீழே கொண்டு வந்தனர். அடையாளம் காண முடியாமல் கிடந்தவற்றையும் தனித்தனி பொட் டலமாக கட்டி கீழே கொண்டு வந்தனர். மொத்தமாக 300 பைகளில் உடல்கள் கொண்டு வந்துள்ளனர்.

அவை அனைத்தும் இஸ்லாமாபாத் மருத்துவ கல்லூரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை 46 பேரின் உடல்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டு உள்ளன. அடையாளம் தெரியாத அளவுக்கு உருக்குலைந்து உள்ள உடல்கள் மரபணு சோதனை மூலம் அடை யாளம் காணப்படும் என்று உள்துறை மந்திரி அப்துல் ரகுமான் மாலிக் கூறினார்.

மேலும் இறந்தவர்களில் 2 பேர் அமெரிக்கர்கள். 6 பேர் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள். மிசாதள்ளுத் என்ற கால் பந்து பெண் வீராங்கனையும் பலியாகியுள்ளார்.

விபத்துக்கு மோசமான வானிலை தான் காரணம் என்று கூறப்பட்டது. இருந்தாலும் நாச வேலையும் காரணமாக இருக்கலாம் என கருதி உளவுத்துறை விசாரணை நடத்தி வருகிறது.

இதேவேளை விமானத்தின் கறுப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலமும் விபத்துக்கான காரணத்தை கண்டுபிடிக்க முயற்சி நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஆபிரிக்க நாடுகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஐக்கிய ஆபிரிக்கா

## லிபியா அதிபர் கடாபி திட்டம்

(கம்பாலா)

ஆபிரிக்க நாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஐக்கிய ஆபிரிக்க நாடு என்ற ஒன்றை உருவாக்குவோம் என்று லிபியா அதிபர் கடாபி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

ஆபிரிக்க ஒன்றிய மாநாடு லிபியா நாட்டின் தலைநகர் கம்பாலா நகரில் நடக்க இருக்கிறது. இந்த மாநாடே ஐக்கிய ஆபிரிக்காவை தொடங்குவதற்கான ஆயத்தமாகும். மேற்கத்திய நாடுகளின் தலையீடு இல்லாமல் ஆபிரிக்கா முன்னேற வேண்டுமானால், அதற்கான ஒரே வழி ஆபிரிக்கா ஒரே நாடாக மாறுவதுதான்.

ஆபிரிக்க ஆணையம் என்ற ஒன்றை நாங்கள் ஆரம்பிக்க இருக்கிறோம். ஆபிரிக்க நாடுகளுக்கு இடையே ஏற்படும் பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக்கொள்கிறோம்.

அமைதி மற்றும் ஒற்றுமை பாதையில் நாங்கள் நடைபோட்டு வருகிறோம். ஒரே நாடு என்ற இலட்சியத்தை நோக்கி நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருகிறோம். இவ்வாறு கடாபி கூறினார்.

அவரது இந்த திட்டம் நடைமுறைக்கு ஒத்துவராது என்று மற்ற ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (6)

## அவுஸ்திரேலியாவில் இந்திய மாணவர் மீது தாக்குதல் நடத்திய இருவர் கைது

அவுஸ்திரேலியாவில் இந்திய மாணவர் மீது இனவெறி தாக்குதல் நடத்திய 2 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தியாவை சேர்ந்த ராஜன் குமார் கட்காம்(28)என்பவர் கிராபிக்ஸ் ஆர்ட்ஸ் படிக்க கடந்த 2008 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா சென்றார். கடந்த பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி போர்ட்சீ பகுதியில் பேருந்தில் ராஜன் சென்றுள்ளார். அப்போது அதே பேருந்தில் வந்த அடையாளம் தெரியாத 3 நபர்கள் ராஜன் மீது இனவெறி தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பியோடினர்.


ராஜனை தாக்கிய மர்ம நபர்களை பொலிஸார் தீவிரமாக தேடி வந்தனர். இந்நிலையில் தேடப்பட்டு வந்து மூவரில் 2 பேரை விக்டோரியா பகுதியில் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். மற்றொரு நபரை விரைவில் பிடிப்போம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (6)






சீனாவின் கிழக்கு மாகாணமான நான்ஜிங் நகரில் ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 12 பேர் பலியாயினர். வாயுக் கசிவினால் இந்த கோர விபத்து ஏற்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.



யா/மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலையின் பெற்றோர் தினவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் பெற்றோர்களின் நாட்டுக் கூத்து நிகழ்வையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பியுடன் பாடசாலை அதிபர் சூ.நோபேட் உத்யகுமார் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# பாலஸ்தீனர்களின் போராட்டத்தை அழிக்கவே டொனால்ட் பெரேரா இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டுள்ளார்

## விக்கிரமபாகு கருணாரட்ன குற்றச்சாட்டு



பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கும் நோக்கத்துடனேயே அரசாங்கம், கூட்டுப் படைகளின் முன்னாள் பிரதம தளபதிளை இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்துள்ளது என இடதுசாரி விடுதலை முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசுக்கும் -இஸ்ரேலுக்கும் இடையில் இரகசிய உடன்பாடுகள் உண்டு. அதனடிப்படையில் தான் போரின் போது இஸ்ரேல் செயற்பட்டு வந்தது. பாலஸ்தீனியர்களின் விடுதலைப் போராட்டத்தை முற்றாக அழிப்பதற்காகவே கூட்டுப்படைகளின் முன்னாள் பிரதம தளபதியான டொனால்ட் பெரேராவை இலங்கை அரசு இஸ்ரேலுக்கு அனுப்பியுள்ளது.

இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் வெளியிட்ட அறிக்கை கண்டனத்துக்குரியது. காசா பகுதியில் உள்ள பாலஸ்தீன மக்களை இஸ்ரேல் படுகொலை செய்து வருகின்றது. உதவிப் பொருட்களுடன் வந்த கப்பலைக்கூட இஸ்ரேல் தாக்கியுள்ளது. இவை அனைத்தும் தவறானவை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மாதர் சங்கத்தின் கீழ்இயங்கும் புத்தூர் மேற்கு விடிவெள்ளி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி முன்றலில் ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆலோசகர் ஐயாத்துரை ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விமலநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சு நடத்தும் க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்திரபாடத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சித்திர பாட செயலமர்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 8.15 மணிமுதல் 4மணிவரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு குறித்த பாட மாணவர்கள் , உயர்தர வகுப்பில் சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பக் கல்வி வகுப்புகளில் சித்திரம் கற்பிக்கும் ஒரு ஆசிரியரும் தவறாது கலந்துகொள்ளுமாறும் எழுதும் பொருட்கள் காகிதாதிகள் போன்றவற்றை எடுத்துவரவேண்டும் எனவும் குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகமளிக்குமாறும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (4)

# பல்கேரிய -கிரேக்க எல்லைப்பகுதியில் 2 இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டனர்

(கொழும்பு)

பல்கேரிய - கிரேக்க எல்லைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் எல்லையைக் கடக்க முற்பட்ட இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்படடுள்ளனர்.

ட்ரக் வண்டி ஒன்றுக்குள் குறித்த இலங்கையர் உள்ளிட்ட சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் மறைந்திருந்ததாகத் தெரிவிக்கப் டுகிறது.

இதில் இரண்டு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக போலந்துக்கான இலங்கைத்தூதரகம் அறிவித்துள்ளது.

அத்துடன் குறித்த நபர்கள் ட்ரக் வண்டியொன்றில் மறைந்து ஹங்கேரிக்குள் பிரவேசிக்க முயற்சித்துள்ளதாக பல்கேரிய காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.

மேலும் இலங்கையர்களுடன், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் ட்ரக் வண்டிக்குள் மிகவும் நுட்பமான முறையில் குறித்த சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் மறைந்து இருந்ததாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (6)

# யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியோரின் பெயர்களை தேர்தல் இடாப்பிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை

## தேர்தல் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியவர்களின் பெயர்களை தேர்தல் இடாப்பிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

குறிப்பாக நாட்டை விட்டு வெளியேறிய யாழ்ப்பாண வாக்காளர்களின் பெயர்களை இடாப்பிலிருந்து நீக்குவதென தீர்மானிக்கப் பட்டுள்ளது.

கடந்த யுத்த காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டலிருந்து பெரும் எண்ணிக்கையிலானவர்கள் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகளை தேர்தல் செயலக உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

2008 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 7 இலட்சத்து 22 ஆயிரம் வாக்காளர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 8 இலட்சத்து 16 ஆயிரமாக உயர்வடைந்ததாகவும் இதில் பலர் தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


யாழ்ப்பாணத்தில் தற்போது இருக்கும் வாக்காளர்களின் எண்ணிக்கை 4 இலட்சமாகக் காணப்படலாம் என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

வாக்காளர்களாக தங்களைப் பதிவு செய்துகொள்ளும் நடவடிக்கைகளில் குடாநாட்டு மக்கள் அதிக ஆர்வம் காட்டத் தவறியுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை வாக்காளர் இடாப்பில் தங்களை பதிவுசெய்யவேண்டும் என்ற ஆர்வம் மிகவும் குறைந்தளவிலான மக்களிடமே காணப்படுவதாகவும் வடக்கில் நிலவிவரும் நடைமுறைச் சிக்கல்களினால் வாக்காளர்களை பதிவுசெய்யும் நடவடிக்கை இன்னும் ஒரு சில மாதங்களுக்கு நீடிக்கக் கூடுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதேச மக்களின் வாக்குரிமையை உறுதி செய்வதற்கு அரசியல் கட்சிகளும் அதிக நாட்டம் காட்டத் தவறியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (6-2)





யாழ்.மாவட்ட 5 வலயங்களுக்கிடையிலாள கட்டாய வரவுக் குழுவை ஒழுங்கமைக்கும் அலுவலர்களுக்கான வலுவூட்டல் செயலமர்வு யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்று யாழ். வலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கலந்துகொண்ட அலுவலர்களையும் யுனிசெவ் நிறுவன யாழ்.கிளையின் அவசர நிகழ்ச்சித் திட்ட கல்விப் பொறுப்பதிகாரி சஜாட் ஸ்மாயில் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# நளினி, முருகன் உள்ளிட்ட நால்வரையும் விடுதலை செய்ய முடியாது

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு



(புதுடெல்லி)

ராஜீவ்காந்தி கொலை வழக்கு குற்றவாளிகளான நளினி, முருகன் உள்ளிட்ட 4பேரையும் விடுதலை செய்ய முடியாது என்று உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் நளினி ஆயுள் தண்டனையும், அவருடைய கணவர் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் மரணதண்டனையும் அனுப வித்து வருகிறார்கள்.

அவர்கள் 4பேரையும் விடுவிக்க வேண்டும் என்று சென்னை மேல்நீதிமன்றத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருச்சி வேலுசாமி என்பவர் மனுத்தாக்கல் செய்தார். அம்மனுவை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம்திகதி மேல்நீதிமன்றம் தள்ளுபடி செய்ததுடன், மனுதாரருக்கு ரூ.ஒரு இலட்சம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தது.


இதையடுத்து, சட்டத்தரணி கருப்பன் என்பவர் உயர்நீதிமன்றத்தில் இதே கோரிக்கையை வலியுறுத்தி மனுத்தாக்கல் செய்தார்.

அம்மனுவில் அவர் கூறியிருந்ததாவது, ராஜீவ்காந்தி கொலையின் சதி அம்சங்கள் குறித்து ஆராய அமைக்கப்பட்ட சிறை ஆணையகம் தனது இறுதி அறிக்கையை 1998 ஆம் ஆண்டு மார்ச் 7 ஆம்திகதி சமர்ப்பித்தது.

அதில், ராஜீவ் கொலையில் சந்திராசாமியின் பங்கு சி.ஐ.ஏ மொசாத் போன்ற வெளிநாட்டு உளவு அமைப்புக்களின் தொடர்பு ஆகியவை குறித்தும், சந்தேகத்திற்குரிய மேலும் 21 பேரின் தொடர்பு குறித்தும் மேற்கொண்டு விசாரணை நடத்துமாறு சிறை ஆணையகம் சிபாரிசு செய்திருந்தது.

அதன் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி, சி.பி.ஐயின் கீழ் பல்நோக்குக் கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட்டது. அது சிறை ஆணையகத்தின் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கத் தொடங்கியது.

ஆணையம் விசாரணையைத் தொடங்கிய தகவலை, விசாரணை நீதிமன்றில் சி.பி.ஐ. தெரிவித்திருக்க வேண்டும்.குற்றம் சாட்டப்பட்டோரின் முறையீடு மனுக்களை விசாரித்து வந்த உயர்நீதிமன்றத்திலும் தெரிவித்திருக்க வேண்டும்.ஆனால் அந்த தகவல்களை நீதிமன்றத்துக்கு தெரிவிக்காமல் சி.பி.ஐ. மறைத்ததால், நளினி, முருகன் உள்ளிட்ட 4பேரும் தண்டிக்கப்பட்டனர்.



சந்திராசாமி மற்றும் 21பேரின் தொடர்பு பற்றி விசாரிக்கப்படவில்லை.

எனவே குறைபாடுகள் விசாரணையின் அடிப்படையில் தண்டிக்கப்பட்ட நளினி, முருகன்,சாந்தன்,பேரறிவாளன் ஆகியோரை விடுதலை செய்ய உத்தரவிடவேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இம்மனு, நீதிபதிகள் வி.எஸ்.சிர்புர்கர், முகுந்தன் சர்மா ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

மனுதாரரின் வாதத்தை நீதிபதிகள் ஏற்கவில்லை. சென்னை மேல் நீதிமன்றில் பிறப்பித்த உத்தரவில் குறுக்கிட விரும்பவில்லை என்று கூறி, நளினி உள்ளிட்ட 4 பேரையும் விடுதலை செய்ய மறுத்துவிட்டனர். மனுவை வாபஸ் பெற்றுக்கொள்ள மனுதாரருக்கு அவர்கள் அனுமதி அளித்தனர். (6-4)

# காஷ்மீர் வன்முறை குறித்து பான் கீ மூன் கவலை

இந்தியாவின் காஷ்மீரில் கடந்த மாதம் 17 பேரின் உயிரைக் காவு கொண்ட கலவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

காஷ்மீரில் நிலவிய பாதுகாப்பு நிலவரம் தொடர்பில் பான் கீ மூன் கவலை வெளியிட்டிருப்பதாக பான் கீ மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

காஷ்மீர் விவகாரத்தை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு அனைவரையும் முன்வருமாறு பான் கீ மூன் அழைப்பு விடுத்திருப்பதுடன் சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அனைத்துத் தரப்பினருக்கும் தேவை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை ஜம்மு காஷ்மீரில் இயங்கும் பிரிவினைவாதக் குழுக்களின் ஆதரவுடன் பாகிஸ்தானில் தளங்கொண்டுள்ள இந்திய எதிர்ப்பு சக்திகள் ஜம்மு காஷ்மீர் மக்களை தூண்டிவிடுவது தனக்குத் தெரியும் என இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (6)

# உடுப்பியிலுள்ள கிருஷ்ணன் கோயிலுக்கு தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்

(உடுப்பி)

உடுப்பியில் உள்ள புகழ்பெற்ற ஸ்ரீ கிருஷ்ணன் கோயிலுக்கு தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளதால் ஆலய வீதிக ளில் வாகனங்கள் செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் உடுப்பியில் புகழ்பெற்ற ஸ்ரீகிருஷ்ணன் கோயில் அமைந்துள்ளது.

இதன் மீது தாக்குதல் நடத்தப் போவதாக தீவிரவாதிகள் சில நாட்க ளுக்கு முன்பு மிரட்டல் விடுத்தனர்.

இதனால், கோயிலுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. கோயிலைச் சுற்றி பல இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.


இதேவேளை பூஜைப் பொருட்கள் சோதிக்கப்பட்ட பிறகே கோயிலுக்குள் செல்ல



பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்ப டுகிறது. மேலும், கோயிலை சுற்றி அமைந்துள்ள நான்கு இரத வீதிகளிலும் பொலிஸார் சோதனை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# உலகிலேயே உயரமான அடுக்கு மாடி குடியிருப்பு

## மும்பையில் அமைக்கத் திட்டம்



(மும்பை)

உலகிலேயே மிக உயரமான அடுக்குமாடிக் குடியிருப்பு மும்பையில் கட்டப்படவுள்ளது.இக்கட்டடம் 442 மீற்றர் உயரத்தில் 117 மாடிகளைக் கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

17ஏக்கர் பரப்பளவில் " லோதா குரூப் "நிறுவனம் நிர்மாணிக்கவுள்ள இந்தக் கட்டடத்தில் மொத்தம் 117 மாடிகளும் அதில் 276 குடியிருப்புகளும் அமைக்கப்படவுள்ளது.

இதற்கு சுமார் 900 கோடி ரூபா முதல் ரூ.1,000 கோடி வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இக் கட்டடத்தில் உள்ள வீடுகளை வாங்க 71/2 கோடி ரூபா முதல் 50 கோடி ரூபா வரை செலவாகும் என்றும் இதில் சதுர அடி 25 ஆயிரம் முதல் 30ஆயிரம் வரை விலைகொண்ட குடியிருப்புகளில் சிலவற்றுக்கு ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டு விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)

# நடிகர் விஜயின் படத்தை வெளிநாடுகளில் திரையிட எதிர்ப்பு

தமிழ் நடிகர், நடிகைகள் படப்பிடிப்புக்காகவோ அல்லது சொந்தக் காரணங்களுக்காகவோ இலங்கைக்கு செல்லக்கூடாது என்று திரையுலகில் சிலர் கூறி வருகின்றனர். அப்படி தடுப்பது தவறு எனஇன்னொரு தரப்பு கூறுகிறது.

இந் நிலையில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தலையிட்டு, இலங்கை செல்லும் நடிகர், நடிகைகளின் படங்களை புறக்கணிப்பதாக அறிவித்துள் ளனர்.

அமெரிக்காவில் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு உள்ளது. இதில் 30 தமிழ் அமைப்புகள் உள்ளன.

இலங்கைக்குச் செல்லும் தமிழ் நடிகர், நடிகைகளின் படங்களை அமெரிக்காவில் திரையிட விடமாட்டோம் என கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

பிரிட்டன், கனடா நாடுகளிலுள்ள தமிழ் அமைப்புகளும் இம் முடிவை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

முதல் கட்டமாக அசின் நடித்து வெளியாக உள்ள படத்தை புறக்கணிப்போம் என அமெரிக்க தமிழ் அமைப்புகளின் தலைவர் பழனி சுந்தரம் தெரிவித்துள்ளார்.

விஜய் நடிப்பில் சித்திக் இயக்கும் படம் காவல் காதல். இதில் அசின் நடித்துள்ளார். தமிழ் படங்கள் வெளிநாடுகளில் அதிக வசூல் ஈட்டுகின்றன. இந்நிலையில் தமிழ் அமைப்புகளின் முடிவால் விஜய் படத்தை அங்கு திரையிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (6)

# பாரதச் செய்திகள்

# இமாலய பனிப்பாறைகளில் பெரும்பாலானவை உருகுகின்றன

## ஆய்வில் தகவல்

(புதுடில்லி)

இமயமலையில் உள்ள பனிப்பாறைகள் தொடர்ந்து உருகுவதாக மக்களவையில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது. மக்களவையில் உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் எழுத்து மூலம் அளித்த பதிலில், இமயமலையில் உள்ள பனிப்பாறைகளின் தன்மை பற்றி நிலவியல் விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர்.

அதில், பனிப்பாறைகள் தொடர்ந்து உருகுவது தெரியவந்துள்ளது. கடந்த 1995 இல் இருந்து 2005 ஆம் ஆண்டு வரை கௌரி கங்கா பள்ளத்தாக்குப் பகுதியில் உள்ள 32 பனிப்பாறைகளில் 20 பாறைகளின் பரப்பளவு 4 சதவீதம் குறைந்தது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் மிலாம், பாகீரதி பனிப்பாறைகள் ஆண்டுக்கு 17 மீற்றர் அளவுக்கு உருகிறது.

பனிப்பாறைகள் உருகுவது இயற்கையிலேயே நடக்கக்கூடிய ஒன்றுதான். இப்போது, பெரும்பாலான இமாலய பனிப்பாறைகள் உருகுகின்றன. இதனால் ஆறுகளில் ஓடும் தண்ணீரின் அளவு கூடும். எனவே அதிக அளவில் பாறைகள் அடித்து வரப்படும். இதே வேளை இமாலயப் பனிப்பாறைகளை காக்க வழிகாட்டு நெறிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது. இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். (6)

# வடமாநிலங்களில் கனமழை ஒரேநாளில் பத்து பேர் பலி

(சவுராஷ்டிரா)

வடமாநிலங்களில் பெய்து வரும் கன மழை காரணமாக ஒரே நாளில் பத்து பேர் பலியாகியுள்ளனர்.

தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்துள்ள நிலையில் குஜராத் மாநிலம் வெள்ளத்தில் மிதந்து வருகிறது. அத்துடன் சவுராஷ்டிராவின் பல பகுதிகளில் மூன்று நாட்களாக இடைவிடாது கன மழை பெய்து வருவதனால் வீதிகள் வெள்ளக்காடாகியுள்ளதுடன் படான் நகரில் பெய்த மழையால், அங்குள்ள ரூபன் நதியிலிருந்து தண்ணீர் அபாய அளவைத் தாண்டி ஓடுகிறது. இதனால் கரையோர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கட்ச் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 6 பேர் பலியாகியுள்ளதுடன் உத்திரபிரதேசத்தில் பெய்து வரும் மழைக்கு 4 பேர் உயிர் இழந்துள் ளனர். இதனால் தென்மேற்கு பருவ மழைக்கு பலியானோரின் எண்ணிக்கை 64 ஆக உயர்ந்துள்ளது. (6)

# புரதச் சத்து பற்றாக்குறைக்கு தீர்வு

நமது உடம்புக்கு அத்தியாவசியமான சத்து, 'புரோட்டீன்' எனப்படும் புரதம். நாம் உண்ணும் உணவின் மூலம் நமக்குத் தேவையான புர்தச் சத்துக் கிடைக்கின்றது.

ஆனால் போதுமான புரதச்சத்துக் கிடைக்காதபோது உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் கடுமையாகப் பாதிக்கப் படுகின்றன.

அசைவ உணவில் அதிக அளவு புரதம் கிடைக்கிறது என்றாலும் பொதுவாக நாம் சாப்பிடும் அசைவ உணவின் அளவு குறைவாகவே உள்ளது. பட்டாணிக்கடலை, பீன்ஸ் போன்ற சைவ வகைகளில் அதிகளவு புரதம் இருந்தாலும் பெரும்பாலான மக்க ளால் அவற்றையும் உண்ண முடியவதில்லை. காரணம் அவற்றின் விளைச்சல் குறைவு என்பதால் விலை அதிகமாக உள்ளது.

புரதச்சத்து மிகுந்த பயறு வகைகளின் உற்பத்தியும் மக்கள் தொகைக்கு ஏற்ப விதத்தில் இல்லை.

அனைவருக்கும் போதுமான அளவு புரதச்சத்து கிடைக்கச் செய்வது எப்படி?

அதற்கு ஜப்பான் நாடு நமக்கு வழி காட்டுகிறது. கடல்பாசிகள் மூலம் புரதச் சத்துத் தேவையை நிறைவு செய்யலாம் என்கிறார்கள் ஜப்பானியர்கள். அந்தநாட்டில் 62 ஆயிரம் எக்டேர் கடல் பரப்பளவில் கடல் பாசிகள் விளைவிக்கபட்டு வருகின்றன.



கடல் பாசிகள் தரத்திலும் அளவிலும் நிறைந்த புரதச் சத்துகளைக் கொண்டவை. அதனால் தான் ஜப்பானியர்கள் தங்களின் தினசரி உணவில் இவற்றைச் சேர்த்துக் கொள்கின்றனர்.

நீண்ட கடல் பரப்பைக் கொண்டிருக்கிற நம் நாட்டுக்கு கடல் பாசி உற்பத்திக்கு நல்ல வாய்ப்பிருக்கிறது.

அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் புரதச்சத்துக் குறைவால் நம் நாட்டுக் குழந்தைகளுக்கு பாதிப்பு என்ற நிலையே இருக்காது.




# சுப்பர் பற்றறி



இந்த பற்றறி அடக்கமாக ஒரு புதிய மூலப் பொருளால் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதிக அளவு மின்சக்தியைச் சேமித்து வைக்கும் திறனையும் பெற்றிருக்கிறது.

சுப்பர் பற்றறியை உருவாக்கிய ஆய்வுக் குழுவில் இடம்பெற்ற பல்கலைக்கழக வேதியியல் பேராசிரியரான சூங் ஷிக்யூ கூறுகையில்,

அணுசக்தி பின்னர் மிகவும் சுருக்கி அமைக்கப்பட்டுள்ள சக்தி சேமிப்பகம் இது என்கிறார்.

இந்த பற்றறியின் முக்கிய மூலப் பொருளான ஜெனான் டைபுளூரைடு என்ற வெள்ளை கிரிஸ்டல் மிக அதிக அழுத்தத்துக்கு உட்படுத்தப்பட்டு பற்றறிக்குள் இடப்பட்டுள்ளது.

இந்த ஜெனான் டைபுளூரைடுக்கு கொடுக்கப்படும் அழுத்தம் சாதாரண வளி மண்டல அழுத்தத்தை விட 10 இலட்சம் மடங்குக்கும் மேலானது. பூமியின் மத்திக்குப் பாதியில் தான் அந்த அளவு அதிக அழுத்தம் காணப்படுகிறது.

இந்த பற்றறி பயன்பாட்டுக்கு வரும்போது இடத்தை அடைக்கும் பெரிய பெரிய மின்கலங்கள் விடை பெற்று விடும்.

பூமிக்குள் அதிக ஆழத்துக்குள் அல்லது பெரிய கிரகத்துக்குள் காணப் படுவது போன்ற அதி அழுத்தத்தைப் பயன்படுத்தி ஒரு சுப்பர் பற்றறியை விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கிறார்கள்.

வோஷிங்டன் ஸ்டேட் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள

# புதுமையான குளிர் கண்ணாடி!

வோஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் ஒரு புதுமையான குளிர் கண்ணாடியை உருவாக்கியிருக்கிறார்கள். இது இதுவரையில்லாத புதிய வசதியைக் கொண்டுள்ளது.



இக்கண்ணாடியை அணிபவர் தனக்குத் தேவையான வண்ணத்தை மாற்றிக்கொள்ள முடியும். தேவையான அளவுக்கு ஒளி ஊடுருவும் தன்மையையும் அமைத்துக் கொள்ளலாம். எனவே இக்கண்ணாடி வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அதாவது இருசக்கர வாகனங்களில் செல்வது, மலையேறுவது போன்றவை.

இந்தக் குளிர் கண்ணாடியில் நிறம் மாறுவதற்கு 1 அல்லது 2 நொடிகளே தேவைப்படுகின்றன. இக்கண்ணாடியில் ஆறு வகையான அடுக்குகள் உள்ளன. புற ஊதா தடுப்பான் ஒரு அடுக்கிலும் ஒளியைக் கடத்தும் இண்டியம் டின் ஒக்சைடு இரு அடுக்குகளிலும் அயனியைக் கடத்தும் பொலிமர் ஒரு அடுக் கிலும், வண்ண மாற்றி பொலிமர் ஒரு அடுக்கிலும் அமைந்துள்ளன. சாதாரணமாகப் பார்க்கும் போது இது பொதுவாகப் பயன்படுத்தப்படும் குளிர்கண்ணாடி போன்றே தோன்றுகிறது. இன்னும் சில ஆண்டுகளில் இந்தக் குளிர் கண்ணாடி விற்பனைக்கு வரும் என்று கூறப்படுகிறது.

இந்தக் கண்ணாடியையே சற்று மாற்றி அமைத்து, கார்களில் பின்னால் வரும் வாகனங்களைக் காண உதவும் கண்ணாடியாகவும் பொருத்தியிருக்கின்றனர். பின்னால் வரும் வாகனத்தை அது வரும் தொலைவைப் பொறுத்து இக் கண்ணாடி நிறத்தை மாற்றிக் காண்பிக்கிறது. ஆக அதிகளவில் பயன்பாட்டுக்கு வரும் போது ட்ரைவர்களுக்கு இது பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

# காயத்தைக் குணமாக்கும் 'பண்டேஜ்!'



உடம்பில் காயம் ஏற்பட்ட இடத்தில் பாதுகாப்பாகப் போடப் படுவது 'பண்டேஜ்' என்ற கட்டு. அதுவே கிருமிகளை அழித்துக் காயத்தைக் குணமாக்கும் வேலையையும் செய்தால்?

அப்படி ஒரு 'பண்டேஜ்' உருவாக்கும் முயற்சியில் ஏறக்குறைய வெற்றி கண்டிருக்கின்றனர்.

பாத் பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஆய்வாளர்களும், இங்கிலாந்து பிரிஸ்டலில் உள்ள குழந்தைகளுக்கான தீக்காய மருத்துவ மைய மருத்துவர்களும்.

'நானோ டெக்னோலஜி' அடிப்படையில் உருவாக்கப் பட்டிருக்கு இந்த 'பண்டேஜ்' 'நானோ கேப்சூல்களில்' இருந்து நோய் எதிர்ப்பு மருந் தான எதிர் உயிரியை (அன்டிபயோடிக்) விடுவிக்கும்.

காயத்தில், பாதிப்பை ஏற்படுத்தும் பக்ரீறியா இருந்தால் அதனால் தூண்டப்பட்டு தானாக எதிர் உயிரி வெளியாகும் விதத்தில் 'பண்டேஜ்' உருவாக் கப்பட்டிருக்கும்.

அப்படி எதிர் உயிரி வெளியிடப்படும் போது புண்ணில் நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கிறது என்று மருத்துவர்களுக்கு உணர்த்தும் வகையில் பண்டேஜின் நிறமும் மாறும்.

தீக்காயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் இது ஒரு முக்கியமான முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. குறிப்பாக தீக்காயத்தால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு காரணம் குழந்தைகளுக்கு தீக்காயத்தில் நோய்த் தொற்று ஏற்படும் போது அது 'டாக்சிக் ஷாக் சிண்ட்ரோம்' என்ற நிலையை ஏற்படுத்தலாம். அது உயிரையே பறிக்கக் கூடும்.

இந்தக் கண்டு பிடிப்பின் அடிப்படையிலான புதிய பண்டேஜை ஜேர்மனியின் 'மாக்ஸ் பிளாங் பொலிமர் ஆராய்ச்சி நிறுவனம்' தயாரிக்க உள்ளது. அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் அந்த 'பண்டேஜ்' சந்தைக்கு வந்துவிடும்.

பக்ரீறியாவின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் இந்த பண்டேஜை வேதி நிபுணர்கள், செல் உயிரியலாளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், அடங்கிய குழு உருவாக்கியிருக்கின்றது.

இந்தக் குழு பண்டேஜை உருவாக்கியதோடு மட்டுமல்லாது , அதை பெரிய அளவில் உற்பத்தி செய்யும் முயற்சியிலும் இணைந்து செயற்பட இருக்கின்றது. எனவே சில ஆண்டுகளிலே இந்த பண்டேஜ் மருந்தகங்களுக்கு வந்துவிடும் என்று கூறப்படுகிறது.

பிறரைச் சீர்திருத்தும் கடமையை விடத் தன்னைச் சீர்திருத்துவதே முதற்கடமை.
– பெர்னாட்ஷா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# டெங்கு அபாயம் காணீரோ விழிமின்! விழிமின்! எழுமின்!

டெங்குக் காய்ச்சலின் அபாயம் எங்களை நோக்கி வேகமெடுக்கத் தொடங்கியுள்ளது. ஏற்கனவே யாழ்ப்பாணத்தை ஒரு கலக்குக் கலக்கிய டெங்குக் காய்ச்சலுக்குப் பச்சிளம் பாலகர்களைப் பலிகொடுத்த துயரம் மறப்பதற்குரியதல்ல.

டெங்கின் அபாயம் உணர்ந்து அனைவரும் விழிப்படைந்து கொண்டமையும் மழை வீழ்ச்சி முற்றுப் பெற்றமையும் டெங்கின் தாக்கத்தைக் குறைத்தது எனலாம்.

டெங்கின் தாக்கம் குறைவடைந்ததும் நாங்களும் சோர்வடைந்தோம். சுற்றுப் புறச் சூழல், வீட்டுச் சூழல் தொடர்பில் செலுத்திய கவனத்தைக் குறைத்தோம்.

இதன் விளைவாக மீண்டும் டெங்குக் காய்ச்சல் தனது கோரத் தாண்டவத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த ஆரம்பத்திற்கு நட்டுவாங்கமாகவும், பக்கவாத்தியமாகவும் மழை காலம் இருப்பதால் டெங்கு நடத்தும் ஊழித் தாண்டவம் உக்கிரம் பெறும் என்பது உறுதி.

அந்தத் தாண்டவத்தில் யாருடைய பெயர்கள் இடம்பெற்றிருக்கின்றனவோ அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

எங்களை நோக்கி எருமை வாகனத்தில் வருகின்ற டெங்குவை விரட்டியடிக்க, பொதுமக்கள் தயாராக வேண்டும்.

டெங்கைப் பரப்பும் நுளம்பின் உற்பத்தியை, பெருக்கத்தை முற்றாக ஒழித்துக் கட்டுவதற்குத் திடசங்கற்பம் பூண்டால் வருகின்ற மழை காலம் விவசாயம் விளைந்து மனம் மகிழ்கின்ற காலமாக மாறும்.

இதற்காக நாம் செய்ய வேண்டியதெல்லாம் மனச்சாட்சிப்படி நடப்பதாகும்.

எனது காணி, எனது நிலம் என்று மார்தட்டி உரிமை கொண்டாடுவது மட்டுமல்ல; அந்த இடத்தைத் தூய்மையாகவும், துப்புரவாகவும் வைத்து மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்க வேண்டும் என நினைக்க வேண்டும்.

வீதிகளில், வடிகால்களில், பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டுவது, கொள்கலன்களை, குடுவைகளை வீசுவது என்ற பொறுப்பற்ற செயல்கள் மனித உயிரைக் காவு கொள்ளக் காரணமாகி விடும்.

அது மிகப் பெரும் பாவம் என்று நினைக்க வேண்டும். அந்த நினைப்பில்தான் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை வெற்றி தரும்.

இதை விடுத்து நான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணம் இருக்குமாயின், அதுவே டெங்கின் உக்கிரத் தாண்டவத்திற்கு மேடையாக இருக்கும்.

ஆகவே அன்பிற்குரிய மக்களே! வரப்போகும் டெங்கு அபாயத்தைத் தடுத்து நிறுத்தி எங்கள் பிள்ளைச் செல்வங்களைக் காப்பாற்ற வாருங்கள். விரைந்து வாருங்கள். எழுந்து வாருங்கள்.

# வரலாற்று -பண்பாட்டு ஆய்வாளர் கதிரவேலு அருமைநாயகம்


## மறைந்தார் மாண்பு

1983 ஜுலை கலவரத்தின் போது காணாமற் போன ஏழாலை எஸ். கே. அருமைநாயகம் (1939-1983) அவர்கள் மறைந்து 27 ஆண்டுகள் கடந்த போதிலும் அவருடைய பணிகள் தொடர்பான ஆய்வுகள் எதுவும் வெளி வந்ததாகத் தெரியவில்லை.

இவர் விரிவுரையாளர், உள்நாட்டு இறை வரித்திணைக்களத்தின் சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர் போன்ற உயர் பதவிகளை வகித்த காலத்திலே வரலாறு மற்றும் இந்துப் பண்பாடு தொடர்பான மாணவர்களுக்கும் ஆய்வாளருக்கும் பயனுள்ள பல கட்டுரைகளை எழுதினார். இவருடைய கட்டுரைகள் சஞ்சிகைகள், ஆண்டு மலர்கள், பத்திரிகை என்பவற்றிலே வெளி வந்துள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளி வந்த சிந்தனை எனும் சஞ்சிகையின் ஆரம்ப கால நிர்வாகியாக இருந்த இவர், இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக் கொள்கை கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்கள் போர்த்துக்கீசரும் கோட்டை இராச்சியமும் பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் - விமர்சனம் போன்ற கட்டுரைகளை எழுதினார்.

வரலாற்று விடை எழுதும் முறை (கல்வி 1968), வரலாற்று மாணவன் கண்ணில் குவெய்றொஸ்(இளங்கதிர் 1961), சுவாமி ஞானப்பிரகாசரும் வரலாற்றாராய்ச்சியும்(தினகரன் 1981) சேர் முத்துக்குமார சுவாமி - ஆங்கிலம்(ட்ரிபியூன் 1979) போன்ற வரலாற்றுக் கட்டுரைகளையும்,



ஆங்கில அரசாங்கமும் சைவ சமயக் கல்வியும் ( இளங்கதிர் 1967) சைவ சமய விழிப்புணர்ச்சி 19 ஆம் நூற்றாண்டு (இணுவில் சிவகாமி அம்மன் சிறப்புமலர் 1978) தேசிய வரலாற்றுப் பின்னணியில் நாவலர் (நாவலர் நூற்றாண்டு மலர் 1979) அனுராதபுரத்தில் இந்து சமய தற்காலம் (அனுராதபுரம் விவேகானந்த சபை பொன்விழா மலர்) இராமகிருஷ்ணா இயக்கத்தின் சுருக்க வரலாறு - ஆங்கிலம் (கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் பொன்விழா மலர்) என்பன இந்துப் பண்பாடு சார்ந்த கட்டுரைகளாகும்.

**முருகேசு கௌரிகாந்தன்**
**விரிவுரையாளர்,**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### மூன்றாம் பிறை பார்ப்பது ஏன்?

சிவன் தனது தலையின் வலப்பக்கம் பிறைச்சந்திரனுக்கு இடம் கொடுத்துள்ளார். இது பெரும் தத்துவத்தை உணர்த்துகிறது. அமாவாசைக்கு அடுத்த நாளிலிருந்து சந்திரன் வளர்கிறார்.

முதல் இரண்டு நாட்கள் பிறை சரிவரத் தெரியாது. மூன்றாம் நாளிலிருந்தே தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கும். இந்நாளில் சந்திரன் களங்கம் இல்லாத பரிசுத்தமான நிலையில் இருப்பாராம்.

நான்காம் நாளில் இருந்து சந்திரனின் மீது நிழல் விழுவதாகவும், இந்நாளில் இருந்து சந்திரன் களங்க நிலை அடைவார் என்றும் சொல்வர்.

சிவன் தலையில் வைத்திருப்பது மூன்றாம் பிறையாகும். அதாவது மனதில் களங்கம் இல்லாத, தூய்மையான பக்தியைக் கொண்டவர்களை சிவன், தன் தலையில் வைத்துக்கொண்டாடுவார் என இதன் மூலம் உணர்த்தப்படுகிறது. இதனால் தான் மூன்றாம் பிறையைப் பார்ப்பதை பக்தர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதியில், வீதி அகலமாக்கும் வேலைகளுக்காக உயரழுத்த மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் முழுவதிலும்,

நாளை மறுதினம் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி , கோப்பாய், மற்றும் காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை,சரவணை, அல்லைப்பிட்டி ஆகிய தீவக பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் யாழ் பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (4)

# வெள்ளி நற்சிந்தனை

133

## பக்தியின் மொழி தமிழ்

கிடைத்த ஒன்றை இழந்துவிடாமல் இருப்பதற்கும் நாம் பெரு முயற்சிகள் செய்ய வேண்டி வரும். உலக வாழ்வியலில் கிடைத்திருக்கும் நல்ல பதவியை நிலையாகப் பெறுவதற்காகப் பலர் பாடுபடுவதை நாம் நேரில் கண்டுள்ளோம். சில வேளை நாமே அத்தகைய முயற்சிகளைச் செய்துள்ளோம். இறைவழிபாட்டிலும் நாம் ஏதோ ஒரு எதிர்பார்ப்போடு இறைவனை நாளும் வணங்கும் போது அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாவிட்டால் அதைப்பற்றிப் பலவாறு சிந்தித்துப் பார்ப்பது எம்முடைய இயல்பாகவுள்ளது.

சிவனருள் பற்றிய உணர்வு கைவரப் பெற்ற போது மணிவாசகரும் இத்தகைய சிந்தனைக்கு ஆளாகிறார். தான் பெற்ற இறை உணர்வை இழந்து விடுவேனோ என்ற ஐயம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் இறைவனிடம் தன்னிலையை விளக்க முற்படுகிறார். இறைவன் முதலில் தந்த திருக்காட்சியைக் காண்பதற்குத் தான் அருகதை யற்றவனாகி விடுவேனோ என நினைந்து மனம் வருந்துகிறார். 'நாயடியேன்' எனத் தன்னைக் குறிப்பிடுகிறார். பிறந்தது முதலே சிவனடியானாக வாழ்வு நடத்தாமல் இடையிலே அடியானாக வந்த தன்னை ஒரு இழிந்தவனாகவே கருதிச் செயற்படுகிறார். அவரது உள்ளத்திலே ஏனைய சிவனடியார்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்க்கும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. தனக்கும் அவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை வெளிப்படையாகவே குறிப்பிடுகிறார்.

அவர் குறிப்பிடும் செயற்பாடுகள் இரண்டாகும். ஒன்று நல்ல மலர்களைப் புனைந்து இறைவனை வணங்காமை. மற்றது இறைவன் நாமங்களை நாத்தழும்பு ஏறும்படி ஏத்திப் பாடாமை. முதன் மந்திரியாக இருந்தமையால் அவரால் இத்தகைய வழிபாட்டு நடைமுறைகளைப் பின்பற்ற முடியவில்லை. திருப்பெருந்துறைக்கு வந்த பின்னர் தான்; சில வழிபாட்டு நடைமுறைகளை நாள்தோறும் தான் செய்யவில்லை என்பதை அவர் நேரடியாக அறிந்து கொண்டார். 'இருந்து நலமலர்புனையேன்' என்று அவர் குறிப்பிடும் நடைமுறை கவனிக்கத்தகுந்தது. மலர்களை இறைவனுக்கு மாலையாக்கிச் சூட்டும் நடைமுறையையே அவர் குறிப்பிட்டுள்ளார். இந் நடைமுறை இன்றுவரை வழக்கிலுள்ளது. பல்வேறு நல்லின மலர்களை ஆய்ந்தெடுத்து கவின்நிறைந்த புனைவாக்கி இறைவனுக்குச் சூட்டும் போது மனம் பரவசப்படுகிறது. இறையுருவின் அழகுக் கோலம் கண்டு கண்களிக்கும். மெய்சிலிர்க்கும். நா இறைவன் திருக்கோலக் காட்சியைப்பாடி ஏத்தும். எனவே உடலையும் உள்ளத்தையும் ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடாக விளங்கும் மலர்ப்புனைவு பண்டு தொட்டே வழிபாட்டு நடைமுறைகளில் இணைந்துள்ளது. இன்று இறைவழிபாட்டு நடைமுறைகளில் செயற்கை மலர்ப்புனைவுகள்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இடம் பெறத் தொடங்கியுள்ளன. மணிவாசகரைப் போல நல மலர்புனையாமைக்காக நாமும் வருந்த வேண்டி நேரிடும். இயற்கை மூலம் இறைவன் தரும் கொடையாக மலர்கள் விளங்குகின்றன. இறையருள் வேண்டிய அடியவர் எல்லோரும் மலர்புனைந்தேத்தி வழிபாடு செய்துள்ளதை அவர்கள் பாடற்பதிவுகளால் நன்கு அறியமுடிகிறது. அதை மீண்டும் செயற்படுத்த மணிவாசகர் நினைவூட்டுகிறார்.

'வருந்துவன் நின் மலர்ப்பாதமவை காண்பான்
நாயடியேன்
இருந்து நலமலர் புனையேன் ஏத்தேன் நாத்தழும்பேறப்
பொருந்திய பொற்சிலை குனித்தாய் அருளமுதம்
புரியாயேல்
வருந்துவன் நற்றமியேன் மற்றென்னே நான் ஆமாறே'



தென்மராட்சி,வடமராட்சி வலயத்தை சேர்ந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கண்டி மல்வத்து பீட மகாநாயக்கதேரர் உரையாற்றுவதையும் மற்றும் பாடசாலை மாணவர் ஒருவருக்கு உபகரணம் வழங்குவதையும் அற்லஸ் நிறுவனப்பணிப்பாளர் நிர்மல மகாநாயக்க, மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம், யாழ் மாவட்ட பிரதான தளபதி பிராங்கி றொட்றிக்கோ ஆகியோர் பாடசாலை உபகரணங்களை கையளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# வடபகுதி மீன்பிடித் துறைமுகங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை

## அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் மயிலிட்டி, குருநகர், பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்களை துரித கதியில் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இதற்கு டென்மார்க் அரசாங்கமும் ஜப்பானின் ஜய்க்கா நிறுவனமும் உதவிகளை வழங்கவுள்ளன என்று மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்தன தெரிவித்தார்.

மீன்பிடி துறை அமைச்சில் வடக்கு, கிழக்கு விவகாரங்களை ஆராய விசேட பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

வடக்கு மாகாணத்தில் பல்வேறு மீன்பிடி துறைமுகங்களை புனரமைப்பு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கியமாக மயி லிட்டி, குருநகர், பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள மீன்பிடி துறைமுகங்களை துரித கதியில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்விடயம் குறித்து டென்மார்க் அரசாங்கத்துடனும் ஜப்பானின் ஜய்க்கா நிறுவனத்துடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இப்பகுதியில் மீன்பிடித்துறையை விருத்தி செய்வதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

இதேவேளை வடக்கு கிழக்கு மீன்பிடித் துறை விவகாரங்களை ஆராயும் நோக்கில் மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சில் விசேட பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை அனைவருக்கும் தெரியும்.

அதனூடாக வடக்கு, கிழக்கு விடயங்கள் ஆராயப்பட்டு வருக்கின்றன.மேலும் எதிர் வரும் மாதம் நான் இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை செய்ய இருக்கிறேன்.

இந்த விஜயத்தின் போது இருநாடுகளுக்கும் இடையிலான விடயங்கள் குறித்து ஆராயப்படும்.

மீன்பிடி தொழிலில் ஈடுபடும் இரண்டு நாடுகளினதும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து இந்திய உயர்அதிகாரிகளுடன் ஆராய எதிர்பார்க்கின்றேன் என்று தெரிவித்தார்.

(6-2)

# விவசாயக் கடன் வழங்கப்பட்டது

(நல்லூர்)

கோப்பாய் வடக்கு மத்திய விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 130 விவசாயிகளுக்கு வெங்காய பயிர் செய்கைக்கு இலங்கை வங்கி கோப்பாய் கிளையினால் 50 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சம் வரையில் கடன் வழங்கப்பட்டுள் ளதாக கோப்பாய் வடக்கு மத்தி விவசாய சம்மேளனத்தின் தலைவர் இ.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

இவ் விவசாயிகள் வங்கியினால் பெறப்பட்ட கடனைக் கொண்டு விவசாய வெங்காயச் செய்கையில் துரிதமாக ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (2-134)

# வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு நடமாடும் மருத்துவ கூடம் அன்பளிப்பு

சுதேச மருத்துவ நடமாடும் கூடம் ஒன்று வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்துக்கு வட மாகாண ஆளுனர் ஜி. ஏ சந்திரசிறியினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. திருகோணமலையில் வரோதய நகரில் உள்ள விவசாயக் கட்டிடத்தொகுதியில் வைத்து வட மாகாண சுதேச மருத்துவப் பணியாளரிடம் இது சம்பிரதாய பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இதன் ஒட்டு மொத்தப் பெறுமதி 5 மில்லியன் ரூபாய் ஆகும்.முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மீள் குடியேற்றக் கிராமங்களில் இந்நடமாடும் மருத்துவகூடம் சேவையாற்றும் என்று தெரிவிக்கப்படுகிறது.



இலங்கையின் வரலாற்றில் சுதேச மருத்துவத்துக்கென நடமாடும் மருத்துவ கூடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும். (6)

# கியூபாவின் புரட்சித்தலைவர் புதிய புத்தகமொன்றை வெளியிடவுள்ளார்

கியூப முன்னாள் தலைவர் பிடெல் காஸ்ட்ரோ எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் புதிய புத்தகமொன்றை வெளியிடவுள்ளதாக செவ்வாய்க்கிழமை அறிவிப்புச் செய்துள்ளார்.

அந்நாட்டு அரச ஊடகத்தில் வெளியிடப்பட்ட கடிதத்திலேயே அவர் இவ்வாறு அறிவிப்புச் செய்துள்ளார்.

*த ஸ்ரறெஜிக் விக்டறி* என்ற மேற்படி புத்தகம் 50 வருடங்களுக்கு முன் போராளிகளுக்கும் சர்வாதிகாரி புயிஜென்சியோ பதிஸ்டாவுக்கு கீழான 10 000 இராணுவத் தினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலை கருப்பொருளாக கொண்டமைந்துள்ளது.

தனது புதிய புத்தகம் தொடர்பில் பிடெல் காஸ்ட்ரோ விவரிக்கையில் இதனை பதிஸ்டாவின் பாரிய எதிர்ப்பு நடவடிக்கை என்று அழைப்பதா அல்லது எவ்வாறு 300 பேர் 1000 பேரைத் தோற்கடித்தார்கள் என்று கூறுவதா சரியானது என்று எனக்குத் தெரியவில்லை. இது ஒரு விஞ்ஞான கதை போன்றதாகும் என்று கூறினார்.

2006 ஆம் ஆண்டு சுகவீனம் அடையும் வரை 47 வருடங்கள் கியூபாவை பிடெல் காஸ்ட்ரோ ஆட்சி செய்திருந்தார்.

நீண்ட காலமாக பொதுமக்கள் முன் தோன்றாது இருந்து வந்த பிடெல் காஸ்ட்ரோ அண்மைய வாரங்களில் 7 தடவைகள் பொது இடத்தில் தோன்றியமை குறிப்பிடத்தக்கது.

கடந்த திங்கட்கிழமை பிடெல் காஸ்ட்ரோவால் புரட்சி ஆரம்பிக்கப்பட்ட 57 ஆவது ஆண்டு விழாவை கியூபா கொண்டாடியது.

(6)

# ஈழத்தமிழர்களின் உரிமைகளை கனடிய அரசு மதித்து நடக்க வேண்டும்

## மனிதாபிமான அமைப்புகள் கோரிக்கை

கனடா நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்று கூறப்படும் தாய்லாந்து சரக்குக்கப்பலான எம்.பி.சன். சீ.இல் பயணிக்கின்ற ஈழத் தமிழர்களின் உரிமைகளை கனேடிய அரசு மதித்து நடக்க வேண்டும் என்று கனடா வைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனிதாபிமான அமைப்புக்களான அகதிகளுக்கான கனேடிய பேரவை கனேடிய தமிழர் பேரவை சர்வதேச மன்னிப்புச் சபையின் கனேடிய கிளை ஆகியனவே கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

சர்வதேச மனித உரிமைகள் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு இத்தமிழர்களைக் கௌரவமாக நடத்த வேண்டும் என்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டு வரு கின்ற இவர்களுக்கு கனடா பாதுகாவலாக மாற வேண்டும் என்றும் இத்தமிழர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்றும் இந்த அமைப்புக்கள் இறைஞ்சி உள்ளன.

இத் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று இக்கூட்டு அறிக்கையில் சூசகமாக சொல்லப்பட்டுள்ளது. (6)

# டெண்டுல்கர் இரட்டைச் சதம்; ரெய்னா சதம்; இந்திய அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை



(கொழும்பு)

சச்சின் டெண்டுல்கர் இரட்டைச் சதமும் சுரேஸ் ரெய்னா சதமும் அடித்து அசத்த இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்று இலங்கை அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள நிலையில் 2-வது டெஸ்ட் கடந்த 26 ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 642 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் அணித் தலைவர் குமார் சங்கக்கார 219 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன 174 ஓட்டங்களையும் பரணவிதான 100 ஓட்டங்களையும் சமரவீர ஆட்டமிழக்காமல் 76, டில்சான் 54 ஓட்டங்களையும் எடுத்தனர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 382 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் 4 ஆம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு டெண்டுல்கர்-ரெய்னா ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தினை வழங்கினர்.

இதில் சுரேஸ் ரெய்னா 192 பந்துகளில் தனது முதலாவது டெஸ்டில் கன்னிச் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார். மறுமுனையில் சச்சின் டெண்டுல்கர் 261 பந்துகளில் 150 ஓட்டங்களைக் கடக்க இந்த ஜோடி 5-வது விக்கெட்டுக்காக 250 ஓட்டங்களை எடுத்தனர்.

இதில் சுரேஸ் ரெய்னா 228 பந்துகளில் (12 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 120 ஓட்டங்களை எடுத்து மெண்டிஸின் பந்து வீச்சில் சங்கக்காரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 497 ஓட்டங்களை எடுத்து 5-வது விக்கெட்டையிழந்தது.

அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் தோனி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை வேகமாக எடுத்தார். மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய சச்சின் டெண்டுல்கர் 338 பந்துகளில் தனது 5-வது இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இதில் அணித் தலைவர் தோனி 56 பந்துகளில் அரைச் சதத்தைக் கடந்தார். மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வழங்கிய சச்சின் டெண்டுல்கர் 347 பந்துகளில் (23 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 203 ஓட்டங்களைக் குவித்து டில்சானின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தனவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ஹர்பஜன் சிங் வந்த வேகத்திலேயே ஓட்டம் எதனையும் எடுக்காமல் டிச்சானின் பந்து வீச்சில் சங்கக்காரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்.

இந் நிலையில் 8-வது விக்கெட்டுக்காகத் தோனியுடன் இணைந்த மிதுன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார்.


இந்த ஜோடி 8-வது விக்கெட்டுக்காக 51 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது அணித் தலைவர் தோனி 138 பந்துகளில் (7 பவுண்பரிகள் உட்பட) 76 ஓட்டங்களை எடுத்து டில்சானின் பந்து வீச்சில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து இஷாந் சர்மா களமிறங்க மறுமுனையில் மிதுன் 97 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 41 ஓட்டங்களை எடுத்து மெண்டிஸின் பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழக்க இந்திய அணி நேற்றைய 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 669 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

இதில் இஷாந் சர்மா 10 ஓட்டங்களுடனும் ஓஜா ஓட்டம் எதனையும் எடுக்காமலும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பந்து வீச்சில் அஜந்த மெண்டிஸ் 4 விக்கெட்டுக்களையும் திலகரட்ண டில்சான் 3 விக்கெட்டுக்களையும் ரான்டீவ் 2 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.




இப் போட்டியின் 5-வதும் இறுதியுமான நாள் ஆட்டம் இன்றாகும். இந் நிலையில் ஆட்டத்தின் 2-வது இன்னிங்ஸில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடும் பட்சத்தில் போட்டியைச் சமநிலையாக்க முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தபாலக ஊழியர் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் நவாலி வடக்கைச் சேர்ந்த மானிப்பாய் தபால் நிலைய உத்தியோகத்தரான குமாரகுலசிங்கம் ஈஸ்வரன் (வயது-35) என்பவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-3)

## வயோதிபரின் சடலத்தை பெற்றுக் கொள்ள அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து மந்திகை ஆதார வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறச் சென்ற வயோதிபர் ஒருவர் நேற்று அங்கு மரணமாகி விட்டார்.

ஏ.பாலசிங்கம் (வயது-83) என்பவரே மரணமானவர் ஆவார். இவரது சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இவரது உறவினர்கள் வைத்தியசாலைப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கூடைப்பந்தாட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கிணங்க உடுவில் மகளிர் கல்லூரி விளையாட்டுக் குழுவினரின் ஏற்பாட்டில் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான சுற்றுப் போட்டியை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உடுவில் மகளிர் கல்லூரி அதிபரும் யாழ்.மாவட்ட பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவருமாகிய சிராணி மில்ஸ் தெரிவித்துள்ளார்.

இப் போட்டியில் பங்குகொள்ளும் பாடசாலைகள் உடனடியாக தமது பதிவுகளை உறுதிப்படுத்துவதுடன் பெயர் விபரங்களை உடற்கல்வி ஆசிரியர் ப.தர்மகுமாரனிடம் ஒப்படைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகள் எதிர்வரும 4 ஆம், 5 ஆம் திகதிகளில் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ச)

## இருபது-20 கிரிக்கெட் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த இருபது-20 கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கழகத் தலைவர் எஸ்.ரேகன் தலைமையில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் கரவெட்டி மகேசன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இவ் இறுதிப் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கரவெட்டிப் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சிறிபாஸ்கரன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன்,

சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டிப் பிரதேச சமுர்த்தி வங்கி அலுவலர் இ.உதயகுமார் மற்றும் ஜே/351 கிராம சேவையாளர் வி.வைத்திலிங்கம், ஜே/350 கிராம சேவையாளர் நா.சிவதர்சன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற கழகங்கள் மற்றும் வீரர்களுக்கு வெற்றிக் கேடயங்களையும் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர். (ச-3,24)

## விண்ணப்பம் கோரல்கள்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆவண உதவியாளர்கள் மற்றும் பாடசாலை புள்ளி விபரவியலாளர் பதவிக்குரிய உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் தமது வலயக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர்/திணைக்களப் பொறுப்பாளர் ஊடாக 2010.08.27 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

❖ ❖ ❖

இலங்கை அதிபர் சேவையின் 1, 2-I, 2-II மற்றும் 3 ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தை 2010 ஓகஸ்ட் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அதிபர்/கோட்டக் கல்விப் பணிப்பாளர்/வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது தங்களது சேவை நிலைய பொறுப்பாளர் ஊடாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

இவை தொடர்பான விபரங்களை இன்று வெளியாகும் வர்த்தமானிப் பத்திரிகையில் அல்லது வலம்புரிக் காரியாயத்தில் பார்வையிட முடியும். (ச-3)

## ஆங்கில கற்கைநெறிக்கான தர மதிப்பீட்டுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பொது ஆங்கில கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தர மதிப்பீட்டுப் பரீட்சை நாளை 31 ஆம் திகதி காலை 10-12 மணிவரை நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரிகள் தவறாது இப் பரீட்சைக்குத் தோற்றுமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## சிங்களக் கற்கை விரிவுரை நாளை நடைபெறாது

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறும் சிங்களச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமை நடைபெற மாட்டாது எனவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும் எனவும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)


## கில்னர் பாடசாலையின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை சென்.பீற்றர் கில்னர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலையின் கில்னர் மண்டபத்தல் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வண.பிதா எஸ்.எஸ்.ஞானசேகரன் மற்றும் அவரது பாரியார் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந் நிகழ்வில் பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ச)



அடிப்படை வசதிகளின்றி வீதியோரத்தில் வாகன இரைச்சல் சவால்களுக்கு மத்தியில் கல்வி பயின்று வருகின்ற கிளிநொச்சி முறிப்பு விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களின் அவல நிலையைப் படங்களில் காணலாம்.

# லண்டனில் உண்ணாவிரத...

பரமேஸ்வரன் வழக்குத் தொடர்ந்திருந் தார்.இந்த வழக்கில் நேற்று வியாழக் கிழமை லண்டன் நீதிமன்றம் தீர்ப்பளித் தது. இந்தவழக்குவிசாரணையின்போது சம்பந்தப்பட்ட இரு பத்திரிகையின் சார் பில்வாதாடியவழக்கறிஞர்களும்தாங்கள் வெளியிட்ட செய்திக்கான ஆதாரங்கள் இல்லை என்று ஒப்புக்கொண்டார்கள். இது குறித்த மறுப்பை வெளியிடவும் பரமேஸ்வரனுக்கு 77 ஆயிரத்து 500 ஸ்ரேலிங் பவுண்ட் நஷ்டஈடு வழங்கு வதாக அந்த இரு பத்திரிகைகளும் ஒப்புக்கொண்டதாக பரமேஸ்வரனின் வழக்கறிஞர் மேக்னஸ் பாயிட் தெரி வித்தார்.

இந்த பத்திரிகைகளின் பொய்ச் செய்தி காரணமாக கடந்த 8 மாதங்க ளாக தான் மிகுந்த அவமானங்க ளைச் சந்தித்ததாகவும் இந்த நிலையில் நேற்று வந்துள்ள தீர்ப்பு தனக்கு மகிழ்ச் சியளிப்பதாகவும் பரமேஸ்வரன் பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித் தார். இவர் நீதிமன்றத்தை விட்டு வெளி யே வந்தபோது தனது உடலில் புலிக் கொடியைப் போர்த்தியிருந்தார்.

போராட்டத்தின் போது பல தமிழ் அமைப்புக்கள் பங்கேற்றாலும் தனக் குத் தனிப்பட்ட முறையில் அவை உதவ முன்வரவில்லை என்றும் வெற்றி பெற்றால் வழக்கில் சன்மானம் என்ற அடிப்படையிலேயேதான் வழக்கறிஞ ரை அமர்த்தி இந்த வழக்கை எதிர்கொண் டதாகவும் அவர் கூறினார். (ச-3)

## ஞானக்குழந்தைஇல்ல விளையாட்டுவிழா

கந்தர்மடம் அரசடி ஞானக்குழந்தை இல்லத்தின் 20ஆவது வருடாந்த விளை யாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாட சாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை ஆசிரியர் திருமதி கேதார பூரணி ஞானகாந்தன் தலைமையில் இடம் பெறும் விழாவுக்கு பிரதம விருந்தினராக யூனி யன் அஷ்சூரன்ஸ் பிராந்திய முகாமையா ளர் ந.சுகுணன்,சிறப்பு விருந்தினராக கந் தர்மடம் வடமேற்கு கிராம சேவையாளர் தி.சிறீஸ் கந்தராசா, கௌரவ விருந்தினராக பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி. காசி நாதன் ஆகியோர் கலந்துகொள்வர். (ந-5)

# சம்பந்தனின் வேண்டு...

முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊட கவியலாளர் சந்திப்பு நேற்று முற்ப கல் அரசாங்க தகவல் திணைக்களத் தில் நடைபெற்றபோது ஊடகவிய லாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி யொன்றுக்கு பதிலளித்த போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதா வது,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையி லான குழுவினர் தமிழ்நாடு முதல் வர் கருணாநிதியிடம் விடுத்த வேண் டுகோளின் பெயரில் இந்தியப் பிரத மர் மன்மோகன் சிங் விசேட பிரதி நிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடு செய்துள்ளார்.

இதில் எந்தவித ஒளிவுமறைவு மில்லை. இலங்கையின் நெருங்கிய நண்பன் இந்தியா. இருநாடுகளுக்கு மிடையில் நீண்டகால நல்லுறவு நிலைக்கின்றது.

அண்மையில் இந்திய விஜய மொன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,இந் திய அரசியல் கட்சிகளின் தலைவர் களை சந்தித்த பின்னர் இலங் கை நிலைமை களை நேரில் அவ தானிக்க விசேட பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைக்கு மாறு இந்தியப்பிர தமர் மன்மோகன் சிங்கிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார் என்றும் அமைச்சர் கூறி னார். (ச-3,5)


அரசறிவியல் கற்கும் அன்பு மாணவர்களே!

ஏ.சி.ஜோர்ச் எழுதிய

அரசறிவியல்: ஓர் அறிமுகம்




நூல் வெளிவந்து விட்டது.

2011 புதிய கலைத் திட்டத்திற்கு அமை வாக அரசறிவியல் மாணவர்களின் நன்மை கருதி வெளியிடப்பட்ட இப் புத்தகத்தை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்பு: 38/10, மருதடி வீதி,யாழ்ப்பாணம்.

தொ.இல: 0777110306 (இ)



கடந்த 32 வருட காலமாக கொழும்பில் தனது தலைமையகத்தை கொண்டு இயங்கி வந்த

## ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ற்மென்ஸ் லிமிட்டெட்

## TRADE FINANCE & INVESTMENTS LTD.

(இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டது)

தனது கிளையை தமிழ் மணக்கும், யாழ்.மண்ணில்

இல.74 கன்னாதிட்டி வீதியில்

எதிர்வரும் 02.08.2010 அன்று ஆரம்பிக்கவுள்ளது.

யாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, மிகக் குறைந்த வட்டி வீதத்தில்

01. இலகு கடன்கள்

02. வாகனங்களைக் கொள்வனவு செய்ய,

(இரு சக்கர, முச்சக்கர, விவசாய வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள்)

- லீசிங் வசதிகள்
- பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு லீசிங் வசதிகள்
- வாடகைக் கொள்வனவு வசதிகள்

“ எதிர்கால நிதிக் கனவுகளை நிகழ்காலத்தில் நனவாக்கும் பங்காளன்”

T.P.: 0212221900, 1898 E-mail: tradefij@sltnet.lk

FAX: 0212221899

(C-768)


# புனர்வாழ்வு முகாமில்...

நாடுகளுக்கு அழைப்புகளை மேற் கொண்டுள்ளனர். இவர்கள் தமது சர்வதேச வலையமைப்பினருக்கு தகவல்களை வழங்கியிருக்கலாம் எனவும் பாதுகாப்புப் படையினர் சந் தேகம் வெளியிட்டுள்ளனர்.

தொலைபேசிகளில் எடுக்கப் பட்ட அழைப்புக்கள் தொடர்பாக விசா ரணைகள் நடத்தப்பட்டு வருகின் றன. கையடக்கத் தொலைபேசிகளு டன் 14 சிம் அட்டைகள் முப்பது பற் றரிகள் மற்றும் 21 சார்ஜர்கள் என் பன கைப்பற்றப்பட்டுள்ளன.

புனர்வாழ்வு முகாமில் அதிகாரி கள் மேற்கொண்ட தேடுதலில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன. அதே வேளை இது குறித்து இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் துரிதமான விசாரணையை ஆரம்பித்துள்ள தாகவும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை புனர்வாழ்வு முகாம் களில் உள்ள புலிகளின் சந்தேக நபர்கள் கையடக்கத் தொலைபேசி களை வைத்திருப்பது தடைசெய்யப் பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணை யாளர் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் ஒரு தொலைபேசியில் உள்வரும் அழைப்புக்களுடன் தொடர்பு கொள்வதற்கு மாத்திரம் கண்காணிப்புடன் அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுவருகிறது.

அதேவேளை தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள புனர்வாழ்வ ளிக்கப்பட்டவர்களுக்கு கையடக் கத் தொலைபேசிகளை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என வும் ரணசிங்க கூறியுள்ளார்.

மருதமடு முகாமில் கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட் டுள்ளமை தொடர்பாக விசாரணை கள் நடைபெற்று வருவதாகவும் இந்த முகாமில் புலிகளின் முன் னாள் உறுப்பினர்கள் 500 பேருக்கு புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப் பட்டு வருவதாகவும் சுதந்த ரணசிங்க மேலும் கூறியுள்ளார். (ச-5)

# சீன இராணு...

பரப்பில் கண்ணிவெடி அகற்றம் பணிகளைமேற்கொள்வதற்கு தேவை யான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் வீதிகளை அகலமாக்கும் பணி களை மேற்கொள்வதற்கென சீனக் கைதிகள் அழைத்து வரப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# எந்தவொரு பயங்கர...

மீறாத வகையில் இவ்வாறான நட வடிக்கைகளை மேற்கொள்ள முடி யும் எனவும் ரம்புக்வெல கூறியுள் ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத் தில் நேற்று நடைபெற்ற அமைச் சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கே.பி. என்ற குமரன் பத்மநாதன் தொடர்பில் இப்படியான நடவடிக்கை எடுக்கப்படுமா என் பதை தன்னால் தற்போது கூற முடி யாதெனவும் ஊடகத்துறை அமைச் சர் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் சர்வ தேச பொறுப்பாளராக செயற்பட்டு வந்த கே.பியை அரசாங்கம் தனது சாட்சியாளராக பயன்படுத்தவுள்ள தாக வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பாக ஊடகவியலாளர் ஒரு வர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக் கும் போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

இதேவேளை புலம்பெயர்ந்த தமிழர்கள் குறித்து அரசாங்கம் கடந்த காலங்களில் எண்ணியது போல் தற்போது எண்ணவில்லை எனவும் தற்போது விடுதலை புலி களுக்கு எதிரான புலம்பெயர் தமி ழரும் இருக்கின்றனர் எனவும் இவர்களுடன் தொடர்புகளை ஏற் படுத்தும் முனைப்புக்களில் கே.பி. அரசாங்கத் துக்குக் கிடைத்த பெரும் சொத்து எனவும் அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல தெரிவித்துள் ளார். (ச-5)

# ஐ.நா. சபையும்...

ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இலங்கை இணக்கத் தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என யப்பானிய அர சாங்கம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸூக்கும் யப்பானிய வெளிவிவகார அமைச்சர் கட்சுயா ஏகடாவிற் கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

யப்பானுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை வெளிவிவ கார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் டோக்கியோவில் அந் நாட்டு வெளிவிவகார அமைச்சரை சந்தித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளு மாறு யப்பான் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள் ளது.

இதேவேளை யப்பானிய உயர்மட்டத் தூதுக்குழு வொன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று சந்தித்து பேசி யது.

யப்பானிய கினான் நகர முதல்வர் கிரியசு மற்சுபரா உட்பட அந்நாட்டு பிரமுகர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண் டனர். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்து இரு தரப்பினரும் பரஸ்பரம் பேசினார்கள். (ச-5)


மீண்டும் சனி, ஞாயிறு வகுப்புகள்

பொருளியல்

K.பிரதீபன்(BBA)

A/L 2011,2012 வகுப்புக்கள்

NEW SCIENCE HALL

கன்னாதிட்டி யாழ்.நகர்

AAC அரியாலை | வினைஸ்ஸ் சுன்னாகம்

- நாளை முதல் வகுப்புகள் யாழில்
- நேர அட்டவணை அலுவலகத்தில்

(2045)


# சரத் பொன்...

எஸ்.சற்.ரஸீம் ஆகியோர் முன்னிலையில் ட்ரயல் அட்பார் முறையில் ஆரம்பமானது. சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப்பத்திரம் பொன்சேகாவுக்கு வாசித்துக் காட்டப்பட் டது.

அவர் குற்றப்பத் திரத்தில் குறிப்பிட்டி ருந்த குற்றச்சாட்டுக் களை முற்றாக நிரா கரித்தார்.

இந்நிலையில் அர சுத் தரப்புசாட்சிகள் 20 பேருக்கு மன்றில் ஆஜராக வேண்டும் என்று நீதிமன்றம் உத் தரவிட்டு வழக்கைத் தொடர்ந்து விசாரிப் பதற்காக எதிர்வரும் செப்டெம்பர்மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (ச-3)


2010 A/L கலைப்பிரிவு மாணவர்களுக்கான மாபெரும்

## இறுதிக்கருத்தரங்கு

இடம் :- றோயல் கலைக் கல்லூரி பண்ணாகம், சுழிபுரம்

காலம் :- புவியியல் 31.07.2010, 01.08.2010.

வளவாளர்கள் :- Mr.P.S.V.தினேஷ்

Mr.பொன்.நந்தவர்ணன்.

காலம் :- தமிழ் 02.08.2010.

வளவாளர் :- Mr.M.A.M.தாசன்.

இந்து நாகரிகம் :- 03.08.2010

வளவாளர் :- Mr.K.S.ரமணன்.

குறிப்பு :- ✸ அனைத்துப்பாடங்களும் காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை நடைபெறும்.

✸ முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கியதாக அமையும்.

ஏற்பாட்டாளர்கள்

தாசன் கல்வி நிறுவனம், பண்ணாகம்.

(C-766)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.